# நங்கை



NANGAI

WOMEN'S MONTHLY JOURNAL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நங்கை

## இதழ்: 12—96

ஆசிரியர்;

சரோஜா சிவசந்திரன்
B. A. Hons (Cey), M. A. (Jaf).

வெளியீடு:

மகளிர் அபிவிருத்தி நிலையம்,
07, இரத்தினம் ஒழுங்கை,
கே கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம்.

அச்சமைப்பு:

'மணி ஓசை'
12, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

| | |
|---|---|
| தனிப்பிரதி: | ரூபா 15.00 |
| ஆண்டுச் சந்தா: | ரூபா 150.00 |
| (தபாற்செலவு உட்பட) | |

வெளிநாடு (தபாற்செலவு உட்பட)

| | |
|---|---|
| தனிப்பிரதி: | ரூபா 45.00 |
| ஆண்டுச் சந்தா: | ரூபா 540.00 |

சந்தா: காசுக் கட்டளையாகவோ, தபாற் கட்டளையாகவோ ஆசிரியரின் பெயருக்கு தபாற்கந்தோர் நீராவியடி எனக் குறிப்பிட்டு அனுப்புக. காசோலையாகவும் அனுப்பலாம்.

★ அடுத்த 13வது இதழை சிறப்பிக்க கதை, கட்டுரை, கவிதை, துணுக்குகளையும் உங்கள் கருத்துக்களையும் 30-11-96 முன் அனுப்பிவையுங்கள்.

★ நங்கையரின் சிறுகதை தொகுதி ஒன்று விரைவில் வெளியிடவுள்ளோம் அதில் உங்கள் கதைகளை இணைத்துக்கொள்ள விருப்பமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

Nangai - Women's Monthly Magazine.
publishers - Centre for Women and Development
07, Ratnam Lane, off K. K. S. Road Vannarpannai,
Jaffna, Sri Lanka.
Editor - Saroja Sivachandran, B. A. Hons (Cey) M. A.

புதுமை பெண்ணாக புறப்படும் நங்கையரே!
அடிமை விலங்கொடிக்க அணிதிரள்வோம் வாரீரோ!

அட்டைப்படம் 'மருது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா நகர சபை
யாழ்ப்பாணம்

# வேண்டும் வாழ்வுக் கலாசாரம்

ஈழத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கதி (விதி) உலகில் எவ்வினத்திற்கும் ஏற்படக் கூடாதெனப் பிரார்த்திப்போம். பெறுமதி மிக்க மனித உயிர் எக்கணத்திலும், எவ்விடத்திலும், எக் காரணமுமின்றி எவராலும் பறிக்கப்பட்டு விடலாம் என்ற சாவின் கலாசாரமே தற்போது எம் மண்ணில் தலைவிரித்தாடுகிறது.

நாம் உருண்டு புரண்ட முற்றத்தில், ஓடித்திரிந்த ஒழுங்கையில், எம் சொந்த மண்ணில் எம் வாழ்வை நிலைநிறுத்த, அக்கம் பக்கம் அச்சத்துடன் முழிபிதுங்க விழிக்கின்றோம். எம் வயல் நில சேற்றில் கால்புதைத்து நடக்கும்போது கால்களையே இழக்கின்றோம். நீலத்திரைக் கடலோடும்போது இரத்தக் கடலைச் சந்திக்கின்றோம். ஆலயம் செல்லும்போதும் ஆபத்துத் தொடர்கிறது. கல்விச்சாலை செல்லும் சிறார்கள் கருகுவதும் உண்டு. எம்மைப் பயம் பீதியுடன் சாவின் கலாசாரம் சூழ்ந்துள்ளது. வேடிக்கை என்ன வென்றால் எம் சொந்த மண்ணில் என்னை வாழவிடு என திசையெல்லாம் பல்லிளித்து யாசிக்கின்ற இழிநிலை நமக்கு. ஏதுமற்ற ஏதிலிவாழ்வும், அகத்தை விட்டகன்ற அகதி வாழ்வும் வாழ்வோர்,—சமூகப் பாதுகாப்பைப் பலவீனப் படுத்தியோர், கனடாவிலிருந்தும், கொழும்பிலிருந்தும் எம் பிரதிநிதிகளாகப் பிதற்றுவதை சிந்தனைச் சிதறல்களாகச் செவிமடுக்க வேண்டிய துர்பாக்கியம் நமக்கு.

மனித உயிர் மாண்புடையது. அந்த மாண்பை மதிக்கும் பண்பாடே மதிக்கப்பட வேண்டும். சட்டங்கள், விதிகள், கொள்கைகள் எதுவாயினும் அவை மானுட உயர்வுக்காகவே.

நின்று நிதானமாகச் சிந்திப்போம், எம்மை நாம் மீள் பரிசோதனை செய்வோம். சாவின் கலாசாரத்திலிருந்து நாம் நிச்சயமாக விடுபட்டு வாழ்வுக் கலாசாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவேண்டும். இந்த இலட்சியத்திற்காக எம் மக்களும் அனைத்து மக்கள் நிறுவனங்களும் விரைந்து செயற்பட வேண்டும்–வழிகாட்ட வேண்டும். 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' தனிமனிதனால் ஒன்றும் செய்ய இயலாது மக்கள் நிறுவனமயப்படுதல் வேண்டும். கிராமங்களில் நாலுபேர், நகரங்களில் நாலாயிரம் பேர் என்றவாறு ஒன்று சேர்ந்து அமைப்புக்கள், நிறுவனங்கள் நிறுவி எம் சொந்த மண்ணில் எம் வாழ்வை நிலை நிறுத்துவதற்குரிய சகல வழிகளிலும் பாடுபடுவோம். காடாகிப்போன நிலங்கள், கழனிகளாகட்டும். ஓலம் வேண்டாம். ஆலய மணிகள் ஒலிக்கட்டும். கல்விச்சாலைகள் நிமிரட்டும். எம் குழந்தைகளின் மழலைச் சொற்கள் சோளகத்தில் தவழ்ந்து வரட்டும்.

— ஆசிரியர்

பொது சன நூலகம்
7 DEC 1996
மாநகராட்சி மன்றம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியம்

'பெண்ணியம்' இக் கருத்துருவாக்கம் எவ்வித கோட்பாடுகளையோ அன்றிக் கொள்கைகளையோ கொண்டு உருவான தல்ல. ஆகவே எக்காலத்திற்கும், சகல பெண்களுக்கும் பொருந்தக்கூடிய வகை யில் பெண்ணியம் என்ற சொற்றொட ருக்கு சிறந்த வரைவிலக்கணம் கொடுக்க முடியாது. இதன் வரைவிலக்கணம் காலத் திற்கேற்ப மாற்றப்படக்கூடியதும், மாறு படக்கூடியதுமாகும். ஏனெனில் பெண் ணியக் கொள்கைகள் வரலாற்று ரீதியாக வும், கலாசார ரீதியாகவும் திடமான உண்மைத் தன்மைகளைக் கொண்டுள்ள துடன், அறிவுணர்வின் மட்டம், செயற் பாட்டின் எதிர்விளைவு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இதன் ஆழமான கருத்து யாதெனில், 17ம் நூற்றாண்டில், இச்சொல் முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட காலத்தில், பெண்ணியக் கருத்துக்கள் ஒரு மாதிரியாக வும், 1980ல் இதன் செயற்பாடுகள் வேறு பட்டதாகவும் காணப்பட்டது. மேலும் உலகின் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ் வேறு கருத்துப்பட இதன் பயன்பாடு, விளக்கம் அமைவதோடு, நாடுகட்குள்ளும் வெவ்வேறுபட்ட கலாசாரங்கள் பெண் கள் தத்தமது வகுப்பு, கல்வி புரிந்துணர்வு என்பவற்றின் பின்புலத்தை அடிப்படை யாகக் கொண்டு வெவ்வேறு முறையில் செயற்படுத்தலாம். இதனாலேயே பெண் ணியக் கருத்துக்கள் பற்றி மாறுபட்ட பார்வையான கருத்துக்கள், விவாதங்கள் வேறுபட்ட வகைகளில் முன்வைக்கப்படு கின்றன.

பெண்கள் சமுதாயத்தில் தொழில் ரீதியிலோ, குடும்பத்திலோ, சுரண்டப்பட்டு அந்தஸ்து குறைந்த நிலையில் வைக்கப் பட்டுள்ள நிலையினைத் தெரியப்படுத்தி, இந்நிலையினைத் தம் செயற்பாட்டின்மூலம் மாற்றுவதற்காக ஆண்-பெண் இருசாரா ரும் ஈடுபடுதலே பெண்ணியத்திற்கு நாம் கொடுக்கும் வரைவிலக்கணமாகும். இந்த வரைவிலக்கணத்திற்கமைய, பால் வேறு பாட்டை ஆதாரமாகக் கொண்ட பார பட்சம், ஆணாதிக்கம் என்பவற்றை இனம் கண்டு அதற்கு எதிராகச் செயற்படும் எவரும் பெண்ணியவாதியாகக் கருதப்படு வர். இங்கே செயற்பாடே முக்கியம் பெறு கிறது. இச் செயற்பாடு எந்த வடிவிலும் இடம்பெறலாம். ஒரு பெண் தன் தீர் மானத்திற்கேற்ப, கல்வியில் முன்னேற்றம் பெற்று தமக்காக ஓர் தொழிலைத் தேடிக் கொள்வதும் இவ்வகையில் ஒன்றே. ஆகவே பெண்ணியவாதியாக இருப்பதற்கு பெண் ணியக்கருத்து சார்பாளர்களோடு இணைந் திருத்தல் அவசியமன்று. பெண் உரிமைகட் காகப் போராடுதல்என்பது பெண்ணின் ஜன நாயக உரிமைகளை பேணிக்காப்பாற் றுதலே. இவ்வுரிமைகளில் கல்விகற்கும் உரிமை, தொழில் பார்க்கும் உரிமை, சொத்துரிமை, பாராளுமன்ற உறுப் பினராகும் உரிமை, குடும்பக்கட்டுப்பாட்டு உரிமை, மணப்பிரிகை உரிமை போன் றவைகள் அடங்கும். முன்பு பெண்ணிய வாதிகள் சமூகத்தில் சமமான உரிமை வேண்டுமென சட்ட ரீதியில் போராடினர். ஆனால் இன்று பெண்ணியவாதிகள் சட்ட சீர்திருத்தத்திற்கு அப்பால் சென்று, பெண் ணிற்கெதிரான பாரபட்சங்களை முற்றாக முடிவுக்குக் கொண்டு வரும் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர். பெண்களின் ஒட்டு மொத்தமான விடுதலை நோக்கி இன்றைய போராட்டச் செயற்பாடுகள் முனைப் படைந்துள்ளன. வீட்டில் ஆண் களிலும் அந்தஸ்து குறைந்த நிலையில் பெண்கள் நோக்கப்படல், குடும்பத்தின ரால் சுரண்டப்படல், தொழில் நிலைகளில் சமூகத்தில் சமய கலாசார அம்சங்களில் தொடர்ந்து காணப்பட்டு வரும் தாழ்ந்த நிலை, உற்பத்தி, குடும்ப சுமை போன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவற்றால் ஏற்படும் இரட்டைச் சுமை, போன்றவற்றுடன், ஆண்மை, பெண்மை என்ற உடல் ரீதியான வரையறைகட்கு சவாலாகவும் உள்ள செயற்பாடே இன்றைய பெண்ணியம். சுருங்கக் கூறின், பெண்ணிய போராட்டம், வீட்டினுள்ளும், வெளியேயும், பெண்ணிற்கு சமத்துவம், கௌரவம் என்பவற்றோடு பெண் தனது வாழ்வியலைக் கட்டுப்படுத்தும் தன்மை வாய்ந்த சுதந்திரம் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்காகவே ஆண்களோடு பெண்கட்கு சமமான அந்தஸ்த்து வேண்டும் என்று கூறும்போது, இங்கு ஒரு விஷயத்தை தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு கிராமிய விவசாயத் துறைசார் பெண்ணை குடிப்பழக்கமுள்ள, சமூகத்தால் புறக்கணிக்கப் பட்ட ஓர் ஆணிற்கு சமமாக ஆக்குவதல்ல. இங்கே 'சமமான' என்ற பதம் எந்த ஆண்களுக்கு சமமான என்ற ஓர் பிரச்சினையுள் தொக்கி நிற்கின்றது. ஆகவே இன்று பெண்ணியவாதிகள் கேட்பதெல்லாம், சமத்துவத்திற்காக மட்டுமன்றி ஆண் பெண் இருபாலருக்குமான, ஓர் நியாயமான சமூகத்தை உருவாக்குவதே அவர்கள் போராட்டத்தின் முனைப்பாக உளது. □

---

## கண்டிக்கத்தக்க கசப்பான சம்பவம்

மனித உரிமை மீறல் தொடர்பாக அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்களில் பெண்கள் மிகக் கொடூரமாக பாலியல் வன்முறைகட்கு உள்ளாக்கப்படும் சம்பவகளும் அதிகரித்துள்ளதென்பதற்குச் சான்றாக பல கசப்பான சம்பவங்கள் நாளுக்கு நாள் இடம்பெற்று வருகின்றன.

1995 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் சீனாவில்' பெல்ஜிங் நகரில் இடம்பெற்ற நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் பெண்களுக்கெதிராக காட்டப்படும் வன்முறைகள்' பாரபட்சங்கள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதும் ஓர்' சிபார்சாக இடம் பெற்றது. ஆயினும் வன்முறைகள் உலகளாவிய ரீதியில்' அரசியல் பிணக்குகள் இடம் பெறும் நாடுகளில் அதிகரித்து வரும் போக்கு தெளிவாகக் காணப்படுவது கண்டிக்கத்தக்கது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாழும் சிறுபான்மை இனங்கள் இவ்வாறான துன்புறுத்தல்கட்கு உள்ளாவதுடன்' இவர்களால் ஏற்படுத்தப்படும் உரிமை மீறல்கள்' பகிரங்கப் படுத்தப் படுவதுமில்லை. தண்டனைக்குரியவர்கள் எவ்வாறோ தப்பித்துக் கொள்கின்றனர். மனித உரிமைகள் பாதுகாக்கப்படாத நிலைமைகளில் போர், சமாதானம், அபிவிருத்தி என்ற செயற் பாடுகளின் அர்த்தமே பயனற்றதாகிவிடும். அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற, பகிரங்கப்படுத்தப்பட்ட செல்வி ரஜனி வேலாயுதப்பிள்ளை செல்வி கிரிசாந்தி குமாரசாமி, அவரது தாயார், சகோதரர், துணையாகச் சென்ற கிருபாகரன் யாவரும் மிக்க கொடூரமாக கொலை செய்யப்பட்டமை இத்தகைய பின்னணியில் செயற்பட்ட கொடூரமான மனித உரிமை மீறல் நடவடிக்கையே, இவ்வாறான கொடூர நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கடும் தண்டனைக்கு உள்ளாக வேண்டியவரே. ஆகவே, பயத்தைக் களைந்து நடைபெறும் சம்பவங்களை, அன்றன்றே உரிய அமைப்புகள் ஊடாகத் தெரியப்படுத்தி, சமூகப் பாதுகாப்பை நாம் பேணுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறவு**கட்கு வகுக்கப்படும் எல்லைக் கோடு மிகவும் உணர்வுபூர்வமானது. ஒவ்வொருவரும் தமக்குப் புலனாகா வகையில் தனக்கென ஓர் தூரத்தை எல்லையாகக் கொண்டே வாழ்கின்றனர். அந்த வட்டத்துள் வேறு ஒருவர் பிரவேசிக்கும்போது மிகமிக அவதானமாக இருக்க வேண்டும். நாம் எல்லோரும் தெரிந்தோ, தெரியாமலோ இந்த உறவு எல்லைகளைக் கடைப்பிடித்துக்கொண்டு வருகின்றோம். நாம், பிரயாணம் செய்யும்போது, அலுவலகங்களில் வேலை செய்யும்போது, படுக்கை அறையில், சினிமா பார்க்கும் போது, பொது இடங்களில் இருக்கும் போது கூட இந்த உறவு எல்லை மீறப் படாமல் பார்த்துக்கொள்கிறோம். நமது கற்பனை எல்லையை மீறி யாரும் வரக் கூடாது. நாம் நமது எல்லைக்குள் அன்னியர் வர எப்படி வெறுக்கிறோமோ அது போல, பிறர் எல்லைக்குள் நாம் நுழைவதும் வெறுக்கத்தக்க செயலே.

ஆயினும் நாம் பஸ்ஸில் பிரயாணம் செய்யும்போது க்யூவில் நிற்கும்போது சினிமா தியேட்டரில் ஒருவர் அருகில அமரும்போது நம் உறவின் எல்லைகள் மீறப்படுகின்றன. நம் விருப்பத்திற்கு மாறாக பிறர் அருகில் நெருக்கமாக இருக்க வேண்டியுள்ளது. இச்சந்தர்ப்பங்களில் எம்மால் இயல்பாக இருக்க முடிகிறதா?

மனிதன் தன்னைச் சுற்றி வகுத்துக் கொள்ளும் உறவு எல்லை நான்கு பிரிவிற்குள் அடங்குகின்றது.

- ★ *அந்தரங்க வட்டம்.*
- ★ *நட்பு வட்டம்.*
- ★ *அறிமுக வட்டம்.*
- ★ *அந்நியர் வட்டம்.*

**அந்தரங்க எல்லை**- உணர்வு பூர்வமான எல்லை கொண்டது. இவ்வட்டத்துள் காதலன்; காதலி, தாய், தந்தை, அண்ணன், தம்பி, தங்கை, குழந்தைகள் மட்டுமே பிரவேசிக்க முடியும் வேறு எவராவது இவ் எல்லைக்குள் வருவது சகிக்கவே முடியாத ஒன்று.

**நட்பு எல்லை** — கொண்டாட்டங்கள், திருவிழா, கல்யாண வைபவம் போன்ற தினங்களில் தமக்குள் தாம் அமைத்துக் கொள்ளும் எல்லை. இங்கு நண்பர்கள் இயல்பாகவே ஓர் எல்லையை வகுத்துக் கொள்வார்கள். இதை விட்டு விலகவும் மாட்டார்கள். உள்ளாக பிரவேசித்து, அந்தரங்க எல்லைக்குள் நுழைய முயலவும் மாட்டார்கள்.

# உறவுகளின் எல்லைக் கோடுகள்

**அறிமுக எல்லை** - நாம் புதிதாக ஒருவருடன் பேசும்போது இருந்து கொள்ள வேண்டிய தூரம், பெயர் பதிய வருபவர்கள், கணக்கெடுப்பவர்கள், வரிவசூலிக்க வருபவர்கள், தபால்காரர் போன்றவர்கள். இவர்கள் தமக்கு பழக்க மில்லாதவர்கள். ஆனால் இவர்கள் யார் என்று அறிமுகமானவர்கள். இவர்களுடன் பேசும்போது 1.2 – 3.6 மீற்றர் தூர எல்லைக்கு அப்பால் நின்று பேசுதல் விரும்பத்தக்கது.

☐ ஹம்சா ☐

**அன்னியர் எல்லை** - முழுமையாக அறிமுகமில்லாத உறவு. அறிமுகமாகாத மக்கள். ஆகவே உறவின் எல்லையை தமக்கு வெகு தூரத்தில் அமைத்துக் கொள்வது பொருத்தமானது.

**அத்து மீறல்கள்** - அந்தரங்க எல்லைக்குள் ஒரு நபர் பிரவேசிக்கிறார் என்றால் அந்நபர் நமக்கு நெருங்கியவர், அன்புக்குப் பாத்திரமானவர். அல்லது நம்மை தாக்கும் பகை நோக்கத்துடன் வருபவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக இருக்கலாம். முன்னையது நமக்கு இன்பத்தையும், பின்னையது நமக்குப்பதட்டத்தையும் தருகிறது. முன்பின் தெரியாத ஒருவர் மிக அருகில் வந்து நின்றால் நாம் பதட்டப்படுகின்றோம். ஏன்!?

நம் உறவை மற்றவர் மதித்து நடக்க வேண்டுமானால் நாம் வரம்பை - எல்லையை மீறக்கூடாது. அனுமதியின்றி நட்பெல்லையில் இருந்து அந்தரங்க எல்லைக்குள் நுழையக்கூடாது. நாம் பழகப் பழக நமக்குள் உள்ள தூரம் குறையும். இதைச் சரியாகப் புரிந்துகொண்டு எல்லைகளை மீறாது பார்த்துக்கொள்வது அவசியம். எல்லைகளைப் புரிந்து கொண்டால் சரி. □

# விற்பனைப் பொருளாகும் மனித உடல் உறுப்புகள்

**ஐம்பது** வருட காலத்துள் மனித உடல் உறுப்புக்கள் விற்பனை படிப்படியாகப் பெருகி, வளர்ந்துவரும் உலக சந்தையிலும் இடம்பிடித்து விட்டன. இரத்தத்திலிருந்து சிறுநீரகம் தொடக்கம், விந்திலிருந்து கருவரை உலக சந்தையில் விற்கப்படுவதுடன், இதற்கான அரச அதிகார உரிமைப் பத்திரத்தினையும் பல கம்பனிகள் பெற்றுள்ளன. இன்று ஐக்கிய அமெரிக்காவில் மனித அணுக்கள் விற்பனை சாதாரண விடயமாகி விட்டது. உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இரத்தம் மாற்றப்படுவது முதல், மனித உறுப்புக்கள் புதிதாகப் பொருத்தப்படுதல் வரை ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி சந்தையில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. மனிதரின் இரத்தம், சிறுநீரகம், இடுப்பு, மூட்டுக்கள், விந்து, முட்டை, கரு வளர்ச்சியடைந்த கருவின் இழையங்கள், அணுக்கள் போன்றவை இன்று விற்பனைப் பொருட்களாகி விட்டன. சந்தையில் அதிகரித்து வரும் கேள்வி காரணமாக பலர் வேண்டியவற்றை விற்பதற்கு முன்வருகின்றனர். இது மட்டுமன்றி, அவயவங்களைப் பெறுவதற்காக பல குழந்தைகள், சிறுவர்கள். கடத்தப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர். குறிப்பாக மனித பிறப்பியல் கருவூலங்களான விந்து, முட்டை ஆகியவற்றின் விற்பனை பாரிய அளவில் வளர்ந்து வருவதனால், உயர் தொழில் நுட்ப கம்பனிகள் பல இவ்விற்பனை மூலம் பில்லியன் டொலர்களை இலாபமாகப் பெறுகின்றனர்.

தொழில்நுட்ப மாற்றங்கள் காரணமாக இவ்வாறான மனித அவயவங்கள் மாற்றீடு இடம்பெற்ற போதிலும், 'இறப்பு' என்ற இறுதி முடிவு மாறுபடப் போவதில்லை. ஆனால் வாழ்வியல் வட்டத்தின் வரைவிலக்கணங்கள் மாறுபடலாம். பிறக்க இருக்கும் குழந்தையின் உறுப்புக்கள் இழையங்கள் பிறந்த குழந்தைக்கு உறுப்புக்களின் மாற்றீடாகவும், இழையங்களாகவும் பொருத்தப்படுகின்றன, ஓர் உயிரின் இறப்பில் இன்னோர் குழந்தை சீராக்கப்படுகிறது.

வளர்ச்சியடைந்த கருவின் இழையத்தை, 52 வயதுடைய மனிதர் ஒருவரின் மூளையில் பொருத்திய முதலாவது நிகழ்வு 1988 நவம்பரில் ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இவ்வாறான இழைய இணைப்புக்கள் மாபெரும் வெற்றி அளித்துள்ளதால் ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் ஒவ்வொரு வருடமும் 1 .மில். கருச்சிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகள், இதற்காகவே செய்யப்படுகின்றன. மேலும் உலகெங்கும் 30 மில். கருச்சிதைவுகள் இந்நோக்கிற்காக இடம்பெறுவதும் தெரியவந்துள்ளது. இவ்வாறான முதிரா அறுவடை, ஆராய்ச்சிகட்காக அல்லது அவயவங்கள் மாற்றுவதற்காகவே செய்யப்படுகின்றன. முதிராத கருவிலிருந்து பெறப்படும் இழையங்கள், உடனுக்குடன் எடுக்கப்படுதல் சிறந்ததெனக் கருதப்படுவதால் இவ்வாறான கருச்சிதைவுகளும் உடனுக்குடன் செய்யப்படுகின்றன. இதற்கு உடந்தையாக, 18 கருச்சிதைவு நிலையங்களுக்கு ஏற்படும் செலவீனங்களை அமெரிக்கா வழங்குகின்றது.

பிறவாத சிசுக்களின் விற்பனை பெண்களை குழந்தை உற்பத்தி செய்யும் தொழிலகமாக மாற்றியுள்ளதோடு நோயாய் நிலையங்கள், வைத்திய சாலைகள் இவற்றைப் பயன்படுத்தும் விற்பனையாளர்களாகவும், கம்பனிகள் இலாபமூட்டும் நிலையங்களாகவும் வளர்ந்துள்ளன.

## எயிட்ஸ்

ஒரு நோயைக் குறித்துக் காட்டாமல்
பல நோய்களை உள்ளடக்கிய
ஒரு நோய் நிலை.

## பாராட்டு

*யாழ். புனித யோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட் செல்வி எம். ஜெறோம் அவர்கட்கு 'செலாட்' நிறுவனத்தின் சிறந்த அதிபருக்கான விருது கிடைக்கப்பெற்றுள்ளது. வடக்கிலிருந்து ஜனாதிபதியின் இவ்விருதைப் பெற்ற முதலாவது பெண்மணியாகிய இவரைப் பாராட்டுவதுடன் மணிவிழா காணும் இவரது சேவை தொடர வாழ்த்துகின்றோம்.*

## அஞ்சலி

*பிரபல்யமான தமிழ் எழுத்தாளரும், முன்னாள் சண்டே ரைம்ஸ் ஆசிரியருமான* ரீற்றா செபஸ்ரியன் *தனது 60 ஆவது வயதில் புற்று நோய் காரணமாக 29.03.96ல் காலமானார்.*

*இலங்கையின் தேசிய பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றிய முதல் பெண் இவராவார்.*

# அறிஞர் வாக்கு

★ *மனிதன் முதலில் உருவான பூமி, சுதந்திரமான பூமி தான் இயற்கையின் ஆட்சியில் குதூகலமாகத்தான் இருந்திருக்கும்.*

★ *மனிதன் உருவாக்கிய இன்றைய பூமி, சுதந்திரத் தன்மையை இழந்தே இருப்பது பரிதாபத்திற்கு உரியது.*

★ *ஆட்சியை மனிதன் கைப்பற்றியது முதல் சுதந்திரத்திற்கான போராட்டங்களும் ஆரம்பமாகியே விட்டது.*

★ *விடுதலைக்கான முயற்சிகளே மனிதனின் வாழ்வாகி விட்டது.*

★ டால்ஸ்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்குரல்



★ த. செல்வமனோகரி

**அன்புள்ள அன்னைக்கு**

கடைசியாக நீ எழுதிய கடிதத்தில் என் திருமணம்பற்றிக் குறிப்பிட்டு இருந்தாய் உனக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன் என் திருமணம் உன் தீர்மானத்திலல்ல. நீ எழுதியிருப்பவனை என்னால் திருமணம் செய்ய முடியாது. வயசுதானாகிறதே தவிர அவன் இன்னமும் தன் குழந்தைப்பருவ மனோநிலையில் தான். உடலியல் ரீதியாக அவன் ஒரு முழுவளர்ச்சியடைந்த மனிதன் என்பதை மட்டுமே நீங்கள் கருத்தில் எடுக்கிறீர்கள் தவிர, உள்ளத்தளவில் அவன் மனோவளர்ச்சி பற்றி சிந்திக்கவே இல்லை. பெரும்பாலான திருமணங்களின் தோல்விக்கு இஃதே காரணம். என்போல் மனமுதிர்ச்சி மிக்க பெண்ணுக்கு அவன் ஏற்றவனே அல்ல. என் போன்றவர்க்கு மட்டுமே அவன் ஏற்றவனல்லனே அன்றி எல்லோருக்கும், எல்லாப்பெண்களுக்குமல்ல என்பதை நீ கவனத்தில் கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரை அவன் பொறுப்புணர்ச்சியற்றவனும் கூட. திருமணமானால் பொறுப்பு வந்து விடும் என்பதெல்லாம் வெறும் வறட்டுச் சித்தாந்தம். அதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு என் வாழ்க்கை ஒன்றும் பரிசோதனைக் கூடமல்ல. அவன் எனக்கு நல்ல நண்பனாக இருக்கலாம்; கணவனாக அல்ல. ஒரு குடும்பத்தைக் கொண்டு நடத்த பொறுப்புணர்ச்சியும், விவேகமும் புரிந்துகொள்ளலும் மனவிசலாமும் முதலில் அவசியம். நல்ல உத்தியோகமும் தோற்றமும் மட்டுமே அல்ல. அவன் ''நல்லவன்'' என்று நீ சொல்லலாம். யார் இங்கு நல்லவனில்லை? தன் சுயநலம் பாதிக்கப்படாமல் இருக்கும் வரை எல்லோருமே நல்லவர்கள்தான். தன்னைப் பாதிப்பவை நிகழும் போது தான் ஒவ்வொரு மனிதனினதும் முகத்திரைகள் கிழியும். அப்போது அவனின் 'அந்த' முகத்துடன் மோத நான் தயாராக இல்லை அம்மா. அத்தோடு நல்லதனம் மட்டும் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் அளவுகோல் ஆகாது. வாழ்வில் கெட்டவனாய் இருக்க வேண்டிய நேரங்களும் உண்டு. ''பிழைத்து வாழ வல்லனவே நிலைத்துவாழும்' என்ற டார்வினின் கூர்ப்புக் கோட்பாட்டை நீ அறிந்திருப்பாய் எனக்கு" அந்த மாதிரி பிழைத்து வாழத் தெரியாதுதான். ஆனால் எனக்குவருவனாவது அப்படி இருந்தால் தானே வாழ்க்கை வண்டியோடும்? மனப்பொருத்தமற்ற திருமணத்தில் நான் என்னையும் வதைத்து அவனது சந்தோஷத்தையும் குலைத்து வாழ விரும்பவில்லை. இத்தனை அவனுக்காக வக்காலத்து வாங்கியிருந்தாயே அம்மா! அவன் சீதனம் இன்றி என்னைத் திருமணம் செய்ய முன்வரவில்லையே? பெரியார் ஈ.வே.ரா கூறினார் ''பெண்ணைக் கொள்ள ஆணுக்கு உரிமை உண்டு. ஆணைக்கொள்ளப் பெண்ணுக்கு உரிமை வேண்டும். ஆணைத் தொழுதெழப் பெண்ணுக்கு நிபந்தனை இருந்தால், பெண்ணைத் தொழுதெழ ஆணுக்கும் நிபந்தனை இருக்க வேண்டும்''.

எத்தனை தான் பெண்கள் முன்னேறி இருந்தாலும் அன்று வகுக்கப்பட்ட ஆணாதிக்க விதிகளினூடேயே இன்னமும் சமூகம் இயங்குகிறது. சீதனம் என்பது ஒரு புதிய குடும்பம் உருவாவதற்குத் தேவையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை வசதி என்ற ரீதியில் மட்டுமே அது ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது. அது நிபந்தனையாக மாறுமிடத்து புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்றே.

இங்கு நான் என் வேலைத்தலத்தில் கூடப்பல பிரச்சனைகட்கு முகம் கொடுக்கிறேன். நீ 'நங்கை' ஆவணி 1993 இதழில் அதன் ஆசிரியர் ''பெண்ணிலை வாதம் கருத்தோட்டத்தில்'' எழுதியிருந்ததைப் படித்தாயா? ''ஆணாதிக்க மேலாதிக்கம் கொண்ட நிறுவனங்களினூடாக அறிவு, செயற்பாடுகள் வழங்கப்படும்போது பெண்மை குறித்து சமூகம் வழங்கிய வரையறைகளை மீறிச் செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பெண் தனக்குரிய ஒடுக்குமுறைகளைக் களைய வேண்டின் அதற்கேற்ற அறிவையும் உற்பத்தி செய்து கொள்ள வேண்டியது இன்றைய சூழலில் அவசியமாகிறது" என்றிவ்வாறு அவர் எழுதியிருக்கிறார். நான் சில வரையறைகளை மீறி செயற்பட நேர்ந்ததில் பழமைகளில் மயங்கிக்கிடக்கும் சில மனிதர்களின் விவாதத்திற்குக் கருவானேன். ஆனால் அவசியமற்று அந்த சம்பவம் நிகழவில்லை என்பது பற்றி அவர்கள் அறிந்திருந்தமையால் நான் கேலிக்குள்ளாகாமல் இருந்தேன். அதே கட்டுரையில் ஆசிரியர் இன்னோரிடத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல ''தகுதியற்ற ஆண்கள்கூட பெண்கள் மேல் அதிகாரம் செலுத்தும் நடைமுறைதான்'' இங்கதிகம். பல வேலைத்தலங்களில் இன்னமும் இ:.தே பெண்கள் நிலையாக இருக்கிறது. என் விட்டுக்கொடுத்தலும் பொறுமையும் கடமையுணர்ச்சியும் எனக்கு எந்த நல்லதையும் செய்யவில்லை என் சம்பளத்தைத் தவிர. மனிதாபிமான மற்ற, சுயநலமிக்க மனிதர்களுடன் பழகிப்பழகி இன்னமும் உன் மகளுக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருப்பதே அதிகம். இங்கு நான் அதிகமாய்க் கற்றுக்கொண்டது ஒன்றுண்டு ''மனிதரில் எத்தனை நிறங்கள்'' என்பதே அது. இத்தனை நிறங்கள், முகங்கள் பார்த்துச் சலித்த பின்னும் நீ சொல்வது போலுள்ள ஒருவனை என்னால் எப்படி ஒத்துக் கொள்ள முடியும்? வேலையை விடவேண்டும் போன்ற மனோநிலையளவிற்குப் பல தடவைகள் நான் தள்ளப்பட்டேன் ஆனாலும் நான் வேலையை விடாமல் தொடர்ந்திருந்தேன் ஏனெனில் எந்த ஒன்றுக்கும் அது ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி பொருளாதார பலம்தான் நிமிர்ந்து நிற்கவுதவும் என்பதால்.

ஆனால் நீ ஒரு முட்டாள். உனக்கு வேலை கிடைத்தபோது அப்பா விடவில்லை என்று அதை ஒரு பெருமையாய்க் கூறிக்கொண்டு (இப்போதும்) இருந்தாய். அப்படி இருந்ததில் நீ சாதித்ததுதானென்ன? எத்தனை தடவைகள் உன் பொருளாதார சுதந்திர மற்ற தன்மையால் சுயகௌரவமிழந்து உன் குழந்தைகட்காய் அநாவசியமாய்ப் பணிந்து போயிருக்கிறாய்? உன் குழந்தைகள் அவருக்கும் குழந்தைகள் தானே? அவர் தானாகச் செய்வார் என்று உன்னால் ஏன் பேசாமல் இருக்க முடியவில்லை ஓர் உண்மையான நல்ல மனிதன்/தகப்பன் தானாக உணர்ந்து செய்வான் என்ற நம்பிக்கை ஏன் உனக்கு இருக்கவில்லை? உன் புருஷன் மீது உனக்கு அவ்வளவுதான் நம்பிக்கையா? உன் தாம்பத்யம் அவ்வளவுதானா? அப்படியான ஒரு பரஸ்பரம் நம்பிக்கையற்ற வாழ்க்கையைத் தானா வாழ என்னையும் நிர்ப்பந்திக்கிறாய்? இங்கு பலரும் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீ ரொம்பவும் சுயமரியாதைக்காரி நானறிவேன். எனினும் நீ இவ்வாறு வாழ்ந்து கொண்டிருக்கிறாய். விட்டுக்கொடுத்தல் இருக்க வேண்டியதுதான் அது எப்போதும் பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென்பது ஒன்றும் நீபதிபில்லையே? உன்னைவிட அப்பா எனக்கு நிறைய சுதந்திரம் கொடுத்திருக்கிறார். தன் குழந்தைமீது, என் மீதுள்ள நம்பிகையால் மட்டுமே அது. ஒரு பெண்ணுக்குரிய சுதந்திரம் என்ற ரீதியிலல்ல. தன் குழந்தை என்பதால்; அதிலும் நல்ல குழந்தை என்பதால் அளிக்கப்பட்ட சுதந்திரம் அது. இதே அப்பா இன்னொரு பெண் (குழந்தை) என்னளவு சுதந்திரத்துடன் இருப்பதை நிலக்கண்ணாடி கொண்டு பார்க்கக் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில விஷயங்களில் உன்மீது எனக்குத் தீராத கோபமுண்டு. அலுவலகம் விட்டு நான் அலுத்துச் சலித்து வருகையில் ஒரு தேனீர் கேட்டால்கூட ஊற்றிக் குடி என்பாய் வீட்டில் சும்மா இருக்கும் தம்பிக்கு கேளாமலே ஊற்றிக் கொடுப்பாய் அவன் அதிகாரம் பண்ணினாலும் சிரித்தபடி ஊற்றிக் கொடுப்பாய் ஏனிந்த பாரபட்சம்? அவன் ஆண்; நான் பெண்ணென்பதாலா? படிக்க வேண்டிய வயதில் படிப்புமற்று, பொறுப்புக்களை ஏற்க வேண்டிய வயதில் எந்த முயற்சியுமற்று இருக்கும் தம் ஆண் குழந்தைக்ளை படித்து வேலை பார்க்கும் தம் பெண்குழந்தைகளிலும் மேலாக எந்த தகுதியுமற்று வெறுமனே ஆண் என்ற தகுதிக்காய் சீராட்டும் தாய்மார்களே இங்கதிகம். இந்த சீராட்டல்கள் அவர்களை உலகம் பாராட்டும்படி வாழ வைக்காது என்று அறியாத பேதைப் பெண்கள் செயலிது. அம்மா நீ ஒன்று புரிந்துகொள்ள வேண்டும். உன்னளவு எனக்கும் அவன் மேல் அக்கறை இருப்பதால் தான், அவனை இப்படிக் கெடுக்காதே என்கிறேன். உன் கண்மூடித்தனமான பாசம் அவன் வாழ்வை நாசமாக்கிவிடும். உன்னைப் போன்ற பெண்கள் (தாய்மார்) இப்படி எந்த சட்டப்புத்தகத்திலும் இல்லா எழுதாச் சட்டங்களைக் கடைப்பிடிப்பதால் உன் வருங்கால சந்ததிதான் (இருபாலாரும்) பாதிக்கப்படுகிறதென்பதை நீ ஏன் ஒரு கணம் கூடச் சிந்தித்துப் பார்க்க மறுக்கியாய்? இன்று நீ இருத்தி வைத்துச் செய்யும் ராஜோபசாரங்களை அவன் தன் மனைவியிடமும் எதிர்பாப்பான் ஆனால் இன்றய பெண்களின் மனோபாவம் நாளுக்கு நாள் மாறிவருகிறது. மாறிவரும் அந்த மனோபாவங்களில் உன் பிள்ளை போன்றவர்க்கட்கு இடமில்லை இளமைக் கவர்ச்சியில் இயற்கை நியதியில் திருமணம் என்று ஒன்றை அவர்கள் இப்படியானவர்களுடன் செய்தலும் நீண்ட இணைந்து வாழ்தலில் சிக்கலில்லாமல் இல்லை. இப்போதும் உண்டுதான் ஆனால் இன்றைய நிலையின் (ல்) நிகழ்வுகளில் இனிவரும் காலங்களில் பெண்கள் திருமண வாழ்க்கையை முற்று முழுதாக மறுக்கும் ஒரு சூழல் உருவாகலாம். அதை உருவாக்குவது ஆண்களை விட முக்கியமாக உன்னைப் போன்ற பெண்கள் தான்; தாய்மார் தான். அம்மா! ஆணுக்கும் பெண்ணுக்கும் உடற்களைப்பும் மனச்சலிப்பும் ஒன்றுதான். உடற்கூறில் தான் மாற்றமேயன்றி ஆன்மா ஒன்றுதான்; புத்தி ஒன்றுதான். ஆனால் ஒன்றுமட்டும் நீ எனக்கு நன்மை செய்திருக்கிறாய். நீ இந்தமாதிரி நடக்க நடக்க நான் அதற்கு எதிர்பதமாய் உருவாகினேன். அந்த என் மனோநிலையை அறிந்து கொள்வதில் கூட உனக்கு அக்கறையில்லை. பெண்தானே என்ற அலட்சியம்.

உன் வளர்ப்பில் வளர்ந்த தம்பி ஆணாதிக்க மனப்பாங்குடனன்றி வேறெப்படி உருவாக முடியும்? எதிர்த்துருவமாய் நான் எப்படி எமக்குள் ஒட்டுதல் இருக்க முடியும்? எங்களுக்குள் பாலமாய் இருக்க வேண்டிய நீ எம்முறவை அறுத்தவளானாய் உன்னையறியாமலே. உண்மையில். இது குறித்துதான் துக்கப்படுகிறேன். ஆலம் விழுதாய் வளர வேண்டிய உறவை உன் பேதைத் தனத்தால் அழித்து விட்டாயே அம்மா? அவனும் அதை உணரும் மனோநிலையில் இல்லை. நீ தான் அவனுக்கு ஆணாதிக்கம் என்ற திரை போர்த்தி அதனை விலக்கிப் பார்க்க மனோநிலையைக் கற்றுத் தந்திருக்கின்றாயே! விலக்கிப் பார்த்தால் நிச்சயம் அவன் வெளிவருவான். ஆனால் அதற்குள் இந்த சகோதரி மனதால் அவனைவிட்டு வெகுதூரம் சென்றிருப்பாள். ''கோழி மிதித்துக் குஞ்சு முடமாவதில்லை'' என்பது முதுமொழி ஆனால் அவன் உன்னால் முடமாகிப் போன குழந்தை. இதுவரை இது உனக்குத் தெரியாத நீயறியாத வேதனையான செய்தியாகவும் கூட இருக்கலாம் ஆனால் எப்போதாவல் நீ என் மனதைப்படிக்க முனைந்திருந்தால் இந்த வேதனைகள் இன்றில்லை. உன் மனோநிலைகளின் விளைவை நீதானே அனுபவித்தாக வேண்டும். ஆனால் நானும் அனுபவிக்கின்றேன். உன்னைப் புண்படுத்துவதுதான் என் வாழ்க்கையின் இலட்சியம் என்று நினைக்கிறாயா? இல்லை; உன்னைப் புண்படுத்துவதில் எனக்கு இன்பம் என்று நீ நினைக்கிறாயா? அதுவுமில்லை. ஆனால் சுருக்கமாகச் சொன்னால் மனசால் உன்மகளை நீ என்றோ இழந்து விட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி மனசால் நான் ஆண் பெண் பேதமற்று ஒரு ஆன்மாவாக உணரப்பழகி கொண்டதால் எனக்கு இருபாலாரிடமுமே சிநேகம் பூணும் மனோநிலை சுலபமாய் வந்தது எனினும் இருவர்க்கத்திடமுமுள்ள நல்லதை எப்படி போற்றுகிறேனோ அப்படி கெட்டதைச் சுட்டிக் காட்டவும் நான் தயங்குவதில்லையதனால் நான் நண்பர்களற்றுப் போனவள். தனித்த பிரகிருதி. என் தலைமுறையிலும் மனமுதிர்ச்சியற்று உடையிலும், நடையிலும் பேச்சிலும் மட்டுமே புதுமை விரும்பிகளாய் செயலில் எதுவுமற்றவர்களானவர்களே அதிகம். என் மனிதாபிமானத்தையும் பிரியத்தையும் கூட அர்த்தப்படுத்துபவர்களே இங்கு அதிகம். இவற்றையெல்லாம் மீறி என்னுடன் நட்புக் கொண்டிருப்பவர்கள் என் ஆளுமை கள் மீதான வெறும் பிரேமையினால் ஈர்க்கப்பட்டிருப்பவர்கள் என்பதே என் உணர்தல் எனினும் ஆங்காங்கே சில நல்ல மனிதர்களும் இல்லாமல் இல்லை.

அம்மா! பொதுவாக பெண்கள் பொறுப்பேற்க முன்வந்துவிட்டால் அக்குடும் பத்து ஆண்கள் பொறுப்பற்றுப் போகிறார்கள். இது நான் என் அனுபவத்தில் கண்ட உண்மை. எங்கும் எதிலும் நம் வீடும் அப்படித்தான் இல்லையா? நீ சுமக்கிறாய் ....— இன்னமும் உன் ஆத்மா ஒயும் வரை சுமப்பாய் இது உன் தலைவிதியல்ல. நீயே இழுத்து விட்டுக் கொண்ட தலைவிதி. நீயேதான் அதை நேராக்கவும் வேண்டும்.

உனக்கு ஒன்று தெரியுமா என்னை இன்னமும் இந்த சமூகம் குழந்தையாய்ப் பார்ப்பதால் தான் சுதந்திரமாய் இருக்கவிட்டிருக்கின்றது. என்னை என் நல்ல தனங்களு டன் புரிந்து கொண்ட சமூகமே என் சுதந்திரத்தை அனுமதிக்கின்றது. இது வெறும் அனுமதிதான். பெண்களின் சுதந்திரத்திற்கு இன்னமும் அங்கீகரிப்புகள் முற்றுமுழுதாய் கிடைக்கவில்லை. அடி மட்டத்திலிருந்து மேற்தட்டுவரை ஆணாதிக்கத்தில் அடிமட்டப் பெண் கள் ஒரேயடியாய் அடங்கிக்கிடக்கிறார்கள் அல்லது ஒரேயடியாய் தூக்கி எறிந்து விடுகி றார்கள். மேல்தட்டுப் பெண்கள் வசதிகளால் சுதந்திரமானவர்கள் போல் மேலுக்குத் தெரிகிறார்களேயன்றி திருமணம் போன்ற முக்கிய விடயங்களில் சுதந்திரமுடையவர்கள் என்று சொல்ல முடியாது. இடையிலுள்ள பெண்களே சமூகத்தில் இருபக்கமும் போக முடியாமல் அல்லாடுபவர்கள். பண்பாடு பாரம்பரிய மரபுகளுடனான உண்மையான சுதந் திரத்தையடைய முடியாமல் போராடுபவர்கள். சுதந்திரம் என்பது தமது பண்பாட்டுப்பாரம் பரியங்கள் உதறிவிட்டுப் பெறுவதல்ல. அது புரியாமல் தான் பெண்கள் நடையுடைபாவ னைகளில் மட்டும் சுதந்திரம் காட்ட ஆண்கள் பண்பாடு பாரம்பரியம் என்று புலம்புகிறார் கள் மனிதனின் அடிப்படையுரிமைகள் என்ற வகையிலேயே ''பெண்களுக்கான சுதந் திரம்'' என்ற கருத்தும் இங்கு முன்வைக்கப்படுகிறதேயன்றி இதற்கு பெண் ஆணாக மாறுவதென்ற அர்த்தமல்ல. அம்மா இன்னமும் இங்கு சுதந்திரம் கொடுத்தோம். கொடுக் கின்றோம். கொடுப்போம் என்றும்; பெற்றோம், பெறுகிறோம். பெறுவோம் என்றுமே கோஷங்கள் ஒலிக்கின்றன. இது என்ன சுதந்திரம் என்று எனக்குப் புரியவில்லை. சுதந் திரம் கொடுத்துப் பெறுவதல்ல. நாமாய் எடுப்பதுமல்ல. இயல்பாய் நமக்குள் இருப்பது; நிலவுவது, இருக்க வேண்டியது; நிலவவேண்டியது ஆனால் இங்கு பாலியல் பலாத்காரம் மட்டுமன்றி பொருளாதார பலாத்காரம். செய்தொழில் பலாத்காரம் எனப் பெண்கள் பல வழிகளில் வற்புறுத்தப்படுகிறார்கள் பெண் பொங்கி எழாவிட்டால் பொதி சுமக்கி றாள் பொங்கி எழுந்தால் அடங்காப்பிடாரியாகக் கணிக்கப்படுகிறாள்.

உன்னுடன் நான் மோதிக் கொள்வது கூட என் சுதந்திரம் எனும் மனப்பான்மை யிலல்ல உன் பேதமையினால் பழக்கதோஷத்தால் நீ காட்டும் பேதத்தை மாற்று என்பதற் காகவே இதை நீ புரிந்து கொண்டால் போதுமானது. வீடு சிறையாக இருக்கும் பெண் கள் ஒரு கூண்டிலிருந்து இன்னொரு கூட்டிற்குத் தாவும் போல் சீதனத்தை எதிர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோபாவமுடையவர்களாயிருந்தும் சீதனம் கொடுத்து திருமணம் செய்து வெளியேறு கிறார்கள். ஒரு தப்பியோடல் முயற்சிதான், அதுவே நிரந்தர விடுதலை என்றல்ல. வீடு சரியாயிருந்தால் பெண்கள் நாடு திருத்த முன்வருவார்கள். அவள் அடிப்படையிலே பாதிக் கப்படும் போது எதற்கும் பயன்னற்ற ஜீவனாய் அவள் தன் சுயநலமே குறிக்கோளாய் பறந்து விடுகிறாள். அது பறப்பு என்று கற்பனை செய்து கொள்கிறாள். அதே மன நிலையில் தன் குழந்தைகளை உருவாக்குவதிலும் தவறு செய்கிறாள். நீயும் அப்படி உருவான பெண்தானே பாவம்!

அம்மா பெண் மலருமல்ல, நிலவுமல்ல ஆணுக்குள் அடங்கி இருக்கும் அத்தனை குணங்களும் அவளுக்குள்ளும் உண்டு. பல நூற்றாண்டுகளாய் அடக்கி வைத்ததால் அடக் கிப் போனவள் அவள் இப்போது தான் இயல்புக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறாள். வெறுமனே மானென்றும் தேனென்றும் சிலாகிப்பதில் மயங்கும் பெண்களின் பிரதிநிதி யாக இனியும் இருக்காதே. பெண் அலங்கரிப்பது ஆணுக்காய் என்ற மனப்பான்மை யையும் இனியாவது ஒழித்துவிடு, அப்படியானால் ''நீ அலங்கரிப்பதில்லையா? அலங்க ரிப்பது தவறா''? என்றெல்லாம் கேட்டுவிடாதே! நானும் அலங்கரிக்கிறேன். அலங்கரிப் பது தவறுமல்ல ஆனால் இந்த அலங்கரித்தல்கள் என் இரசனையை சுவைகளை வெளிப் படுத்தும் ஒரு முயற்சியாகத்தான் இருக்கிறதேயன்றி வெறும் 'ஆள் கவரும்' முயற்சியல்ல, இயல்பாய்...... இயல்புடன் நாளிருப்பதையே அது குறித்து நிற்கிறது. இது மனிதத்தின் இயல்பேயன்றி பெண்ணுக்கு மட்டும் உரியதல்ல. அன்பாய் அடக்கமாய் அமைதியாய் இருப் பது மனிதத்தின் இயல்பேயன்றிப் பெண்ணுக்கு மட்டுமுரியதல்ல. எதிர்ப்பதமாய் இருந் தல் மனிதமற்ற மனிதத்தின் (!) இயல்பு, இந்த 50 பராயத்திலும் கூட நீ மாறலாம் மனம் வைத்தால் உன்னால் மாறமுடியும். மாறுவாயா? நீ எதையும் சாதிப்பதற்காக மாறவேண் டாம். உனக்காக மட்டும் மாறு. உன்னளவில் உயர்வுபட மாறு இதற்கு மேலும் முயற்சி செய் என்று கூறுவதைத் தவிர நான் வேறு எதைச் சொல்ல?. □

## உடையட்டும் சிறைக்கதவு

பெண்ணே நீ
வீட்டின் வெளியாலே
போக முடியாது- சிறை
கூட்டிற்குள் கிடந்துமடி - இல்லை
சாக நாளும் குறி
என்று பலகாலம்
ஏமாற்றி வைத்திருந்தோம்
இதனாலே......
சிலை போலே நிற்கவைத்து
சீதனத்தால் நிறம் தீட்டி
விலை பேசி விற்று விடும்
பேதமை நீங்கவில்லை
உலைவைக்கும் தொழில் விடுத்து
வேதனைத்தைப் பெறுகின்ற
தொழிலுக்கு
போகாதே என்றெல்லாம்
இன்றும் கூறுகிறோம்
சம உரிமை கேட்டதற்கு
செம உதைகள் உதைத்து
கம கமக்கும் பட்டுடுத்து
சுமங்கலியாய் இருத்துவிடு
இதுவே போதுமென்று
இருட்டடிப்புச் செய்கின்றோம்
இனியும் இவை வேண்டாம்
உடையட்டும் சிறைக்கதவு
-பறவையது
பறக்கட்டும் சுதந்திரமாய்.

★ யு. ஜே. றஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□□ **தங்கள் சுய அறிமுகத்தை நங்கை வாசர்களுக்கு கூறுவீர்களா?**

❁ *அனைத்துலகரீதியாகவுள்ள திருக்குடும்ப சபை எனும் துறவற சபையில் ஓர் உறுப்பினர். 32 வருடங்களாக என் அமைப்பில் இச்சபையினூடாக ஆசிரியப்பணி, இளைஞர்பணி என்பவற்றில் ஈடுபட்டு, எனது சபை நிறுவுனரின் வாழ்வுடன் கூடிய ஆன்மீகத்தில் ஆழப்படுத்த உரோம நகரிலுள்ள எமது தலைமையகத்தில் ஏறக்குறைய 5 ஆண்டுகள் ஆய்வுத் துறையில் ஈடுபட்டேன். இறையியலிலும் உரோமையிலுள்ள "Regma Mundi" எனும் பெண்துறவிகளுக்கான ஸ்தாபனத்தில் பயிற்சி பெற்றுள்ளேன், ஒரு புதிய சமுதாயத்தின் விழுமிய கண்ணோட்டத்தில் எனது பணிகளில் தேவையுள்ள இடத்தில் சேவை பகிர்ந்து கொண்டு இச்சபையின் மாகாணத் தலைவியாகக் கடந்த ஓராண்டளவாகப் பணியைத் தொடர்கிறேன்.*

*சேவை இவற்றிலும் சகோதரிகள் ஈடுபடுகிறார்கள். இவ்வேளைகளில் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாத வகையில் சேவை பெறுவோர் மனச்சோர்வு, அவர்கள் ஒத்துழைப்பின்மை சகோதரிகளின் சேவையைப் பிழையாகப் புரிதல், விமர்சித்தல், மதம் என்ற கண்ணோட்டத்தில் சேவையை உற்றுநோக்கல் என்னும் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். அப்பேர்ப்பட்டவர்கட்காகச் செலவிடும் நேரம், அன்பு, கரிசனம், பகிர்வு, என்பன இவற்றை மேற்கொள்ள உதவுகிறது. எமது அழைப்பே எதிர்ப்புகளுடன் சேவையை மேற்கொள்ள சக்தியைத் தருகின்றது. எமது ஆழ்தியானம், குழுவான ஊக்குவிப்புக்கள், சகோதர பகிர்தல்கள் இவையும் இவற்றை வென்றெடுக்கும் ஆன்மீக பலத்தையும் நம்பிக்கையையும் தருகின்றது.*

# நேர்காணல்

**அருட்சகோதரி சோபியா**
*(திருக்குடும்ப கன்னியர் சபை மாகாணத்தலைவி)*

*பிரதான வீதி, யாழ்ப்பாணம்*

**நேர்கண்டவர்: யோகா**

□□ **பொதுப் பணிகளில் ஈடுபடும் அருட்சகோதரிகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் எவை? அதனை எப்படி எதிர் கொண்டு வெல்கிறார்கள்?**

❁ *எமது சகோதரிகள் $\frac{1}{6}$ வீதமானோர் பாடசாலையில் கற்பித்தல்பணியைப் புரிகின்றனர். பங்குத்தளங்களிலும், குடும்பங்களிலும் அவர்களின் துன்பங்களுடன் கலந்து செவிமடுத்தல், ஆறுதல் கூறுதல், தேவையான உதவிகளை புரிதல், ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்றவை; ஊனமுற்றோர், ஊனக்குறைபாடுடையோர், இளைஞர், விதவைகள் இவர்களுக்கான*

□□ **துறவறப் பணிகள் சமயம் என்ற வட்டத்துக்குள் நின்று விடுகின்றன. இது பற்றித் தங்கள் கருத்தென்ன?**

❁ *இது பலரினதும் ஒரு பொதுவான எண்ணக்கருத்து, எமதுபணிகளில் ஒரு மனிதனுடைய முழுவிடுதலையுமே கருத்திற்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறோம். சமயம் என்ற வட்டத்துக்குள் நிற்கும் போதும் சமுகத்தில் வாழ்கிறோம் — சமுகத்தேவை, சமுக மாற்றங்களையும் நோக்காமலும் இல்லை. எம்மாலான பங்களிப்பைப் பரவலாகச் செய்யமுயல்கிறோம். இது சேவையைப் பெறுபவர்கட்கே தெரியும். இன்னும் செய்ய இடமுண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை ஆசிரியராக இருந்து சபை மாகாணத் தலைவி என்ற பதவி நிலையில் பணியாற்றும் தங்களுக்கு, பாடசாலையிலும் பணித்தளங்களிலும் பெண்களின் பங்களிப்புகள் திருப்தி தருகிறதா? புதியவர்களை உருவாக்க நீங்கள் கூறும் ஆலோசனைகள் எவை?**

முற்றாகத் திருப்தியானதாக இல்லை. இன்னும் முன்னேற இடமுண்டு. இதற்கு நான் கூறவேண்டிய ஆலோசனைகளில் முக்கியமானது பெண்கள் தம்மில் உருவாக்க வேண்டியது தன்னம்பிக்கையே. தன் ஆளுமையை, தனக்குள் அடக்கிய ஆற்றல்களை வெளிக்கொணருமுன் இவர்கட்கு, அவற்றை அடையாளம் கண்டு அவற்றை நெறிப்படுத்தும் அறிவையும், ஆவலையும் உண்டு பண்ண வேண்டும். தமது இருக்கையும், பங்களிப்பும் தன்னையும் தன்சமுகத்தையும் படைக்கத்தேவை என்பதை உணரவும், ஏற்றுக்கொள்ளவும், அதனால் ஒவ்வொரு பெண்ணும் தன் வட்டத்தினுள் செய்யக்கூடியவற்றைச் செய்யும் திறனுக்குரிய வழிகளைக் கண்டு - அதற்கான நேரம் சக்தியைச் செலவிட ஒரு தன்னலமற்ற கையளிப்புக்கு அறிவு புகட்ட வேண்டும். எம்சமுகத்தில் பெண்களுக்குரிய இடம் கொடுக்கப்படுகின்றதா? அல்லது பணிகட்கு அவர்களை உதவிக்கொண்டு அவர்கள் பங்களிப்பைப் பின்தள்ளுவதில் முயல்கின்றதா என ஆண்களின் மனநிலையைச் சற்றுப் பரிசோதிப்பதும் வேண்டற்பாலது.

**மேற்கு நாடுகளில் புலம் பெயர்ந்த எம்மக்களிடையே குறிப்பாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி அடிக்கடி தங்கள் பயணங்களின் போது பெறப்பட்ட அனுபவத்தை சற்று கூறுவீர்களா?**

பெண்கள் தனிமையையும், தூரப்பயணங்களின்போது துணையையும் உணர்கின்றனர். இது சில சமயங்களில் பிரச்சனைகளையும் உண்டு பண்ணுகிறது. வெளிநாட்டிற்கு விவாகத்திற்கென தீர்மானிக்கப்பட்டு அனுப்பப்படுவோர் அவர்கள் திருமணம் வரை இல்லிடப்பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றார்கள், சரியான விழுமியங்கள் அடங்கிய வாழ்வு, சமுக நெறி, புரிந்துணர்வு, கட்டுப்பாடு, இவை எதிர் நோக்கும் பிரச்சினையைக் குறைக்கும். ஒரு சில சுரண்டல்கள், சிறு அளவிலான அடிமைத்தனங்களும் இல்லாமல் இல்லை. பொதுவாகத் தனிமையாகச் செல்லும் பெண்கள் சிலர் தங்கி வாழும் இடம், குடும்பங்களில் சில பிரச்சினைகளை எதிர் நோக்குவது எவ்விடமும் உள்ள ஒரு சமுகப் பிரச்சினைதான். சில நல்ல விழுமியங்களுடன் வாழ்பவர்களைக் கூட மேனாட்டு மயமாக்கும் நம்மவரும் இல்லாமல் இல்லை. சிக்கனம், தம் குடும்பநிலை எம் சமுகத்துன்பங்களை அவர்கள் விரைவில் மறந்து மேல்னாட்டு மயத்தினுள் புகுவது வருந்தத்தக்கதே.

**இன்று பெண்கள் பல பிரச்சனைகளை எதிர் நோக்குகிறார்கள். தங்கள் சபை எவ்வாறு இவற்றை அணுக முற்படுகிறது?**

இளம் பெண்கள், இளம் விதவைகள் குடும்பப்பளுவால் வருந்தும் தாய்மார், விதவைகள், இப்பேர்ப்பட்ட பலரின் பிரச்சினை மலிந்து பொலிந்து வருகின்றன. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அவர்கள் மனச்சுமைக்குச் செவிமடுத்தல், ஒரு சிலரை எமது பாதுகாப்பில் ஏற்றல், குடும்பத் தேவைகளை ஆராய்ந்து உதவுதல், சகோதரிகள் தாம் வாழும் இடத்தில் சந்திக்கும் இப்பேர்ப்பட்ட தேவைகட்கு அவர்கள் அணுகவும், உதவ வேண்டிய ஊக்குவிப்புக்களை மேல்மட்டத்திலிருந்து விழிப்புணர்வுடன் கூடி வழங்கல்; எம் கையிலுள்ள விடுதிச்சாலைகள், பாடசாலைகள் வழியாகவும் தேவையானவற்றைச் செய்தல் போன்றவையும் எமது பணிகளாகின்றன, இப் பிரச்சனையைப் பல நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து, திட்டமிட்டு ஆக்கபூர்வமாகச் செய்வது எமது பரந்த சமுகப்பிரச்சினையை அணுக உதவும் என்பது என் கருத்தாகும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐☐ இன்றைய போர்கால பாதிப்புக்கள் பெண்களையே பெருமளவு தாக்கி உள்ளது இச்சுமையை எதிர் கொள்ள தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?

இவ்வினாவுக்கு நான் மேலேயுள்ள வினாவில் பதில் கூறிவிட்டேன். இருந்தும் போர்க்காலச் சூழலின் பாதிப்புக்களை நாம் தனித்துச் செய்யமுடியாது, பெண்கள் பிரச்சினையை இன்று சமூகமாகவே எதிர் நோக்க வேண்டும், இதில் சிவில் நிர்வாகம், அரசசார்பற்ற நிர்வாகம், துறவறச்சபைகள், சமூக நலன் விரும்பிகள் மதபேதமின்றி ஒரு கூட்டான ஆய்வைத் தேடி, வழிகளைக் கண்டறிந்து, பணிகளைப் பகிர்ந்து, ஒரு நோக்கோடு பணி செய்ய இக்காலம் எமக்கு அழைப்பு விடுகிறது. இதில் சமூகநோக்கும், தூய்மையான எண்ணமும், ஒவ்வொருவர் சுதந்திர பகிர்வும் உற்றுநோக்கப்படல் வேண்டும். எவ்விதமான அமுக்கு சக்திகளினாலும் ஆட்கொள்ளப்படாமலும் ஆட்கொள்ளவிடப்படாமலும் பெண் தன்னுரிமையோடு தன் பெண்மையை வளர்கவும் - பெண்மையின் தாய்மையுணர்வோடு அதற்கேயுரித்தான விழுமியங்களுடன் வளர, வாழ்வைக் கொடுக்க சமுதாயமும் வழி வகுக்க வேண்டும். சந்தர்ப்ப சூழலில் தாக்குண்ட வலுவிழந்த பெண்களுக்கான இல்லிடங்கள் உளவளத்துணை, குடும்ப நலன் நிலையங்கள் அமைக்க, அவை மனித நேயத்தோடு வழிப்படுத்த முயற்சிகளும், வழிகளும் தேடப்படல் வேண்டும். இதற்கான பணிப் பகிர்வு ஒரு சாரார் கையில் இன்றி மனித மாண்பை ஊக்குவிக்கும் அடிப்படையில் இயங்கும் அனைவரும் சேர்ந்து செய்யப்பட வேண்டும். சமூகமான இந்தச் சின்னாபின்ன நிலைகளைச் சமூகமாகவே பரிகரிப்போம்.

☐☐ பழைய மரபுகளில் இருந்து விடுபட்டு பெண்கள் தங்கள் கருத்துதாக்கங்களை முன்வைக்க புதிய படைப்புக்கள் உருவாக வேண்டுமாயின் அதற்கு தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?

பெண்களுக்குரிய ஆற்றல்களை அறிந்து செயற்படுவதற்கான இடங்களைக் கொடுத்தல், தலைமைத்துவம் அளித்தல்: எழுத்தியலில் ஊக்குவித்தல்; கிராமிய மட்டத்தில் பெண்கள் வட்டம்; மாவட்டரீதியில் அன்னையர் நிலையங்கள்; பெண்களின் தொழில், தகைமை அடிப்படையில் ஒன்று கூடல்கள் சமய பேதமின்றி ஊக்குவிக்கப்படல் வேண்டும். ஆலயங்கள், கோவிற் பணிகள் பொதுப்பணிகளில் பெண்களுக்கு இடம்; யாவுக்கும் மேலாக பெண்களுக்கு விழிப்புணர்வும் தன்னம்பிக்கையும் கொடுபடல் வேண்டும். ஆண்கள் இவர்களின் இடத்தை பாகுபாடின்றி ஏற்கும் மனநிலையத் தம்மில் உருவாக்கல் அவசியம்.

☐☐ நங்கை மூலமாக தாங்கள் கூறும் செய்தி?

பெண்களே! நீங்கள் உங்கள் நிலையைச் சற்றே சிந்தியுங்கள். அன்பு, மனிதமாண்பு, சமாதானத்துக்காய் ஏங்கும் இப் பிளவுபட்ட எம் சமுதாயத்தில் கருணை, அன்பு, மன்னிப்பு, தாய்மை, வீரம் போன்ற விழுமியங்களால் வேதனையுறும் எம் சமுதாயத்துக்கு உயிர்கொடுக்க முன்வாருங்கள். கூடிய நேரம், அன்பு, தயார் நிலையை மக்கட்கு முதலீடு செய்வதால் எம் சமுதாயம் விழித்தெழும், அன்புடன் கூடிய மெய்மையையும் பயன்படுத்தி, சமுதாயத்தை விழிப்படையச் செய்யும் வகையில் உங்கள் செயற்திறன், எழுத்துவளம், சமுகப்பணியை எவ்விதபயமும், தாழ்வு மனப்பான்மையும் இன்றிப் பயன்படுத்துங்கள். ஒன்றாக இணையுங்கள். எமதுசுயநலம், செல்வாக்கு, பெருமைகளை விட்டு அனைத்து மக்களையும் அனைவருக்கும் தாய்மார்களாக தாழ்மையுடன் செயற்படுங்கள், அன்பே வெல்லும் அஹிம்சைவழி நடப்போம்— ஆணவத்தை வெல்வோம், சமுதாயம் அமைதிபெற நம்பிக்கையுடன் உழைப்போம். ☐

---

**நங்கையரே!**

எமது நங்கையரின் படைப்புகள் சிறுகதை தொகுதியாக மிக விரைவில் வெளிவரத் தயாராகிறது இதில் உங்கள் ஆக்கங்களையும் இணைத்துக்கொள்ள உடன் எழுதி அனுப்புங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா!...... தம்பி எழும்பி அழுகிறான்''

தர்சினியின் குரல் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த சாரதாவை உலுப்பியபோது, அவள் பதில் குரல் கொடுத்தாள்.

''தர்சினி!... ஒருக்கால் அப்பாட்டைச் சொல்லு தம்பியைப்பாக்கச் சொல்லி''

சிறிதுநேர இடைவெளியின் பின் மீண்டும் தர்சினி உச்சஸ்தாயியில் அம்மாவை அழைத்தாள்.

"அம்மா!...... அப்பா பேசுறார். உங்களை வந்து தூக்கட்டுமாம்''

சிணுக்கத்துடன் ஒலித்த தர்சினியின் குரலையும் மீறிக் குழந்தையின் அழுகுரல் அவளது காதுகளில் ஒலித்தது. அவசர அவசரமாக அரைகுறையாக உடையை மாற்றிக் கொண்டு ஓடிப்போய்க் குழந்தையைத் தூக்கி மார்புடன் அணைத்துக் கொண்டாள். அன்னையின் அரவணைப்பினால் அழுகை ஓய்ந்தபோதும் குழந்தையின் விசும்பல் ஒலி முற்றாக அடங்கவில்லை. கூடவே கணவனது கர்ஜனைக் குரலும் கேட்டது.

''வெய்யிலுக்கால வந்து மனுசர் கொஞ்சம் கண்ணயருவமெண்டால், இஞ்சை பிள்ளையை அழவிட்டிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாய். ஏன் இவ்வளவு நேரமும் வீட்டிலை இருந்த நீ குளிக்காமல் என்ன செய்து கிழிச்ச நீ? சும்மா வீட்டிலை இருந்து கண்டவையோடையும் அரட்டை அடிச்சுப் பொழுதைப் போக்கிறது. சீ! ......... கொஞ்சமேனும் அறிவு சுரணை கிடையாது''

குட்டித் தூக்கம் கலைந்து போன அதிருப்தியில் பொரிந்து தள்ளினான் சிவராமன். சாரதாவுக்குக் கணவனின் வார்த்தைகள் வேதனையும், அதேசமயம் வியப்பையும் தந்தன. நாள் முழுவதும் குடும்பச் சுமையைத் தட்டந் தனியனாகச் சுமக்கும் அவளுக்கு, வெட்டிப்பேச்சுப் பேச நேரம் எங்கே கிடைக்கிறது?

நடந்தாள். சில நாட்களாக அவளது மனத்தின் ஓர் மூலையில் அரும்பியிருந்த, கணவன் மீதான வெறுப்புணர்வு வலுப்பெற்று வருவதை அவளால் நன்கு உணரமுடிந்தது.

'ஏன்தான் இந்த மனுசன் இப்பிடி மாறிப்போயிட்டுதோ?'

அவளது மனதில் தோன்றிய கேள்விக்கு விடை காண முயன்றாள்.

'கல்யாணமான புதிசில எவ்வளவு அன்பாய், ஆதரவோடை நடந்து கொண்டவர். இப்ப ஏன் இப்படி வெறுப்பாய் நடந்து கொள்ளுறார்?'

மறுகணமே அவளது மனம் சமாதானத்தை தேடமுற்பட்டது.

● சிறுகதை

# பேசும் ஊமைகள்

★ மலரன்னை

உள்ளத்தில் தோன்றிய வேதனையுணர்வு ஊற்றாக மாறிக் கண்களில் ஊறிப் பார்வைதனை மறைத்தது. மௌனத்தைத் தழுவியவளாய்க் குழந்தையுடன் சமையலறையை நோக்கி

'பாவம் அவர். இந்த வெய்யிலுக்கால பள்ளிக்கூடத்துக்குப் போய், அங்கை பிள்ளையளோடை கத்திப் படிப்பிக்கிறதெண்டால் களைச்சுத் தானே போவார். அதுதான் கோவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் கூடுதலாய் வருகுதாக்கும்'

கண்களில் கசிந்த நீரை அழுந்தத் துடைத்துத் தனது மனதைச் சமாதானப்படுத்த முயன்றாள், அந்தப் பேதை. எனினும் அவளது மனதில் ஏற்பட்ட புழுக்கம் அவளது வயிற்றில் பசியையும் மழுங்கடித்து விடவே, கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் தேநீர் தயாரிக்கத் தொடங்கினாள்.

தேநீரைப் பருகியதும் சிவராமன், மாலைநேரப் பொழுது போக்குக்குக் கிளம்பிவிட்டான். வீட்டிலோ நிறைய வேலைகள் தேங்கிக் கிடந்தன. அதைப்பற்றியெல்லாம் அவன் கருத்துக்கு எடுத்துக் கொள்வதில்லை. வீட்டில் மனைவி என்றொருத்தி இருந்தால், சகல பொறுப்புகளையும் அவளே சுமக்க வேண்டுமென்றொரு நியதி இருப்பதாக அவன் முழுமையாக நம்பினான். தவிர அவனுக்குச் சாரதாமீது எதுவித கோபமோ வெறுப்புணர்வோ கிடையாது.

கணவனின் அசமந்தப் போக்கினைப் பற்றிய எண்ணங்களில் மூழ்கிப் போயிருந்தவளை, தர்சினியின் குரல் சுயநிலைக்குத் திருப்பியது.

"அம்மா! நீங்கள் ஏன் இன்னும் சாப்பிடேல்ல?"

அந்தப்பிஞ்சின் நெஞ்சத்திலிருந்து பிறந்த கரிசனையைக் கண்டு அவளது உள்ளம் ஒரு கணம் நெகிழ்ந்து போனது. அவளைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன், "எனக்குப் பசிக்கேல்ல தர்சினி" என்று கூறி மழுப்பிவிட்டாள். சாரதாவினால் தனது ஆத்திரத்தைத் தீர்ப்பதற்கு வயிற்றை வஞ்சிக்கத் தான் முடியும். அப்படி ஒரு விநோதமான சுபாவம் அவளிடம் குடிகொண்டிருந்தது.

இரவு நேரம் எட்டு மணியாகியும் சிவராமன் வீடு வந்து சேரவில்லை. சாரதா குழந்தைகள் மூவருக்கும் உணவு கொடுத்துப் படுக்க வைத்தாள். மூத்தவளான தர்சினி மட்டும் அம்மாவிடம் பாடம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

திடீரென நாய் குரைக்கும் சத்தம் கேட்டு தர்சினி திடுக்கிட்டவளாய் அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். சாளரத்தினூடாகப் படலையை நோக்கிய சாரதா, சிவராமன் வேறு இருவருடன் வந்து கொண்டிருப்பதை அவதானித்தாள். அவளது மனம் 'திக்' கென்றது. அவளது ஊகத்தை ஆமோதிப்பது போல் சிவராமன் வந்து அவளது காதுக்குள் கிசுகிசுத்து விட்டுப் போனான்.

"சாரதா சாப்பாடு எடுத்து வையும்"

பசிக்களையினாலும், உடற்சோர்வினாலும் நைந்து போயிருந்த சாரதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிறிது நேரம் படுத்தால்த் தான் உடல் அசதி தீரும் போலிருந்தது. சிறிது தாமதித்தவள் மளமளவென்று அடுப்பை மூட்டினாள் ஒரு கப் தேநீரை ஊற்றிக் குடித்ததும் உடம்பில்சிறிது தென்பு பிறந்தது. உணவு தயாரிக்கத் தொடங்கினாள். துருவுவதற்குத் தேங்காய்ப் பாதியைக் கையிலெடுத்த போது, அதை இருபிஞ்சுக்கரங்கள் பறித்துக் கொண்டன,

"அம்மா! நான் தேங்காய் திருவித் தாறன் என்ன!"

மகளின் செய்கை சாரதாவை ஒரு கணம் நிலைகுலைய வைத்தது.

'பெண்ணாகப் பிறந்து விட்ட காரணத்தினால்த் தான் அவளுக்கு என்மீது பச்சாத்தாப உணர்வு தோன்றியதோ?'

தன்னையே அவள் கேட்டுக் கொண்டபோது நீர்த்திரை அவளது கண்களை மறைத்தது. அடிக்கடி சிவராமன் யாரையாவது கூட்டி வருவதும், அவள் அவசர அவசரமாக உணவு தயாரித்துப் பரிமாறுவதும் எல்லாம் வழக்கத்தில் வந்துவிட்ட பழக்கம் தான். அநேகமாக அவனது நண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்கள் எல்லாம் மதுபான சாலையில் பரிச்சயமான வர்களாய்த்தான் இருப் பார்கள்.

சாரதாவின் பெயரில் பாங்கில் நிலையான வைப் பிலிடப்பட்டிருந்த பணத் தைச் சிவராமன் தனது பெயருக்கு மாற்றிக்கொண் டான். பின்னர் சிறிது சிறி தாக அந்தப் பணத்தை எடுத்து என்னவெல்லாமோ சாக்குப் போக்குச்சொல்லி, எப்படியெல்லாமோ செல வழித்து முடிக்கிறான். அதைப் பற்றி அவள் வாய் திறக்க முடியாது. சில சம யங்களில் மனம் பொறுக்க முடியாமல், அவள் தட்டுத் தடுமாறிக் கேட்டு விட்டால் போதும். 'அது எனக்குத் தான் சீதனமாய்த் தந்தது.' எனக் கூறி ஒரே வார்த் தையில் மடக்கி விடுவான். எதிர்த்துக் கதைப்பதில் பலனில்லை எனக் கண்ட சாரதா, ஊமையாய் மன துக்குள் குமுறுவாள். அப்பா, அரும்பாடுபட்டுத் தேடிய பணம் வீண் விரய மாவதைப் பார்த்தும், பாராதவள் போலிருந் தாள் அந்தப் பேதை. அவ்வேளைகளில் அவளுக் குத் திருமணமான நாட் களில் அம்மா சொன்ன அறிவுறுத்தல்கள் நினைவில் வந்து அவளைப் பேசா மடந்தையாக்கி விடும்.

'கல் எண்டாலும் கண வன். புல் எண்டாலும் புருசன்' எண்டு சொல்லு றவை. சாரதா! நீ வீட் டிலை கொக்காமாரோடை சண்டை பிடிக்கிறமாதிரி, அவரோடை எதிர்த்துப் பேசக்கூடாது. பெண்ணா கப் பிறந்த நாங்கள்பணிஞ் சுதான் போகவேணும்.'

அம்மாவின் சொல்லை அவள் வேதவாக்காகவே கருதி, பொறுமையைக் கடைப்பிடித்து வந்திருக் கிறாள். இப்போது அவள் ஓர் உணர்ச்சியற்ற ஜட மாக மாறிப்போய் விட் டாள். இருந்தபோதும் அவளது மனத்தில் ஓர் உறுதி தோன்றி, நாளுக்கு நாள் அது வலுவடைந்து கொண்டிருந்தது.

'தர்சினியை நல்லாய்ப் படிக்க வைத்து வேலைக்கு அனுப்ப வேணும். பக்கத்து வீட்டு மைதிலியைப் போல அவளும் சுதந்திரமாய்த் திரிய வேணும். சே!......... என்னைப் போல அவளும் வீடே கதி எண்டு கிடக்கக் கூடாது.'

அவளது மனத்திரையில் ஒரு கணம் தர்சினி ஒரு டாக்டராகத்தோன்றி மறைந்தாள். "ம்!......" நிம்மதியான ஒரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப் பட்டது.

ஒருவாறு அன்றைய அலு வல்களை முடித்து அவள் படுக்கையில் சரியும் போது பத்தரையைத் தாண்டி விட்டது. படுக்கையில் புரண்டவளை நித்திரா தேவி அணைக்க மறுத்த போது......... அவளுக்கு வயிற்றுக்குள் ஏதோ புரளு வது போன்ற வேதனை ஏற்பட்டு, அது நெஞ்சுக் குள்ளும் தாவி மூச்சை அடைத்தது. வயிற்றைப் புரட்டிக் கொண்டு வரு வதை உணர்ந்தவள் அவசர மாக எழுந்து வெளிப் புறம் நோக்கி ஓடினாள். கண்களை இருட்டிக் கொண்டு வந்தது தான் அவளுக்குத் தெரியும். "டாார்!......" என நிலத் தில் வீழ்ந்து போனாள்.

நிசப்தமான அந்தவேளை யில் கேட்ட சத்தம், குறட்டை விட்டுக் கொண் டிருந்த சிவராமனை உலுப் பியதும் அவன் விழிப் படைந்தான். விழிப்படைந் தவன் தொடர்ந்து கேட்ட முனகல் ஒலியை இனங்கண் டவனாய்க் குரல் வந்த திசையை நோக்கி விரைந்து போனான். தீப்பெட்டியில் குச்சியை உரசியபோது தோன்றிய வெளிச்சத்தில் சாரதா விழுந்து கிடப்ப தைக் கண்டு திடுக்கிட் டான்.

அவசரமாக விளக்கை ஏற்றியவன் அவளருகில் வந்து தொட்டுப்பார்த் தான். மேனி சில்லென்றி ருந்தது. பீதியுடன் தண் ணீரை எடுத்து வந்து அவ ளது முகத்தில் தெளித் தான். ஒரு காகித மட் டையினால் மெதுவாக முகத்தருகில் விசிறிவிட்ட சிறிது நேரத்தில் சாரதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் விழித்துப் பார்த்தாள்.

சிவராமனுக்கு அப்போது தான் பயம் நீங்கிச் சுய நினைவு வந்தது. அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்து வந்து படுக்கையில் படுக்க வைத்தான். அவளது கைகளை ஆதரவுடன் வருடியவாறே கூறினான்.

''சாரதா! என்னப்பா செய்யுது. என்னைச் சரியாய்ப்பயப்பிடுத்திப்போட்டீர்''

கணவனது ஆதரவான வார்த்தைகள் கேட்டு அவளது மனத்தில் அவன் மீது ஏற்பட்டிருந்த ஆத்திரமெல்லாம் ஆலாய்ப் பறந்து போயிற்று. அவனது நித்திரையைக் குழப்பி விட்ட குற்ற உணர்வே அவளிடம் மேலோங்கி நின்றது. இரக்கம் மேலிட அவனைப் போய்ப்படுக்குமாறு வற்புறுத்திக் கூறினாள்.

''எனக்கு ஒண்டுமில்லை நீங்கள் போய்ப்படுங்கோ. வெள்ளன எழும்பிவேலைக்குப் போக வேணும் மெல்லே''

அவன் எழும்புவதற்கு முன் தான் எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டிய அவசியமிருப்பதை அவள் அந்தக் கணத்தில் மறந்து விட்டிருந்தாள்.

சாரதாவுக்கு சுடச்சுட ஏதாவது குடிக்க வேண்டும் போலிருந்தது. கணவனிடம் வாய்விட்டுக் கேட்பதற்குக் கூச்சமாக அத்துடன் வெந்நீர்ப் போத்தலில் இருக்கும் கொதிநீரை எடுத்தால் குழந்தைக்குப் பால் கரைப்பதற்கு வெந்நீர் இல்லாமல் போய்விடுமே என்ற உணர்வு வேறு தோன்றி அவளை அலைக்கழித்தது. அவளது மனதில் நடக்கும் போராட்டத்தை உணர்ந்து விட்டவன் போல் சிவராமன் அவளிடம் கேட்டான்.

''சாரதா! கோப்பி கொஞ்சம் போட்டுத் தாறன் குடிச்சிட்டுப்படும் அப்பதான் நித்திரை வரும்.''

கணவன் தயாரித்துத் தந்த கோப்பியைப் பருகியவள், சிறிது நேரத்தில் கண்ணயர்ந்து விட்டாள். குழந்தை ரமேசின் அழுகுரல் அவளைத் திடுக்கிட்டு எழவைத்தது. வழமை போல் அன்றும் படுக்கையை விட்டு அவசரமாக அவள் எழ முற்பட்டபோது தலை பாறாங்கல்லாய்க் கனத்தது. உடல் சோர்ந்து மீண்டும் அவளைப் படுக்கையில் தள்ளியது. எதுவுமே செய்யமுடியாத நிலையில் அவள் தர்சினியை அழைத்தாள்.

''தர்சினி! அப்பாவை எழுப்பிவிடு பிள்ளை, தம்பிக்குப் பால் கரைச்சுக் குடுக்கச் சொல்லு, என்னாலை எழும்பேலாமல் கிடக்கு.''

அம்மாவின் குரல் கேட்டு தர்சினி குழந்தையைத் தூக்கியதுடன், அப்பாவையும் எழுப்பி விட்டாள். சிவராமன் எழுந்து வந்து சாரதாவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். அனலாகத் தகித்தது. நிலைமையை உணர்ந்து கொண்டவன் சமையலறையை நோக்கி நடந்தான். அடுப்பை மூட்டுவதில் ஈடுபட்டவனுக்கு அது எரிய மறுத்தபோது கோபம், கோபமாக வந்தது. புகை வேறு கண்களில் புகுந்து அவனை அச்சுறுத்தியது. சாரதா சுமக்கும் வேலைப் பளுவின் ஒரு சிறு துளியை அவனால் இப்போது நன்கு உணர முடிந்தது. கண்களில் ஊறிய நீரைத் துடைத்து விட்டு அடுப்பை ஊதினான்.

''அப்பா! இஞ்சை தம்பி கிணத்துக்கை கல் எறியுறான்'' தர்சினி கொடுத்த குரல் அவனுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது. கிணற்றடிக்கு விரைந்தவன் முன் தர்சினி எதிர்ப்பட்டாள். 'நறுக்'கென அவளது தலையில் ஒரு குட்டு வைத்தவன் அவளைத் திட்டத் தொடங்கினான்.

''நீ பொம்பிளைப் பிள்ளை, வீட்டை, முத்தத்தைக் கூட்டுவது எண்டில்லாமல் இஞ்சை கிணத்தடியில நிண்டு விளையாடுறாய் என்ன''.

அப்பாவின் செய்கை தர்சினிக்கு எரிச்சலைக் கிளப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. "தம்பி மட்டும் கிணத்தடியில நிண்டு விளையாடலாம், அவனுக்கு அடிக்காமல் என்னை மட்டும் ஏன் அடிக்கிறியள்?"

"அவன் ஆம்பிளைப் பிள்ளை, குளப்படி செய்தால் பரவாயில்லை. நீ பொம்பிளையாய்ப் பிறந்த நீ பொறுப்பாய் இருக்க வேண்டாமோ."

சொல்லிக் கொண்டே சிவராமன், சுரேஷைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனான். அவனது மனதில் தனது இளமைப் பருவம் நிழலாடிற்று. தோட்டக் கிணற்றுக்குள் நீரில் மிதக்கும் தவளைகளுக்குக் கல் எறிவதில் தனி இன்பம் அவனுக்கு ஏற்படுவதுண்டு. நேரம் போவதே தெரியாமல்நின்று விளையாடுவான். சில சமயங்களில் அப்பாவின் கண்ணில் அகப்பட்டு அடியும் வாங்கிக் கட்டியிருக்கிறான். இப்போது தர்சினியின் குரல் அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

"அதென்ன ஆம்பிளையும் பொம்பிளையும் அவை மட்டும் பொறுப்பாய் இருக்கத் தேவையில்லையே?"

வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டே அவள் அம்மாவின் அறையைப் பெருக்கத் தொடங்கினாள். மகளின் செய்கைகளை அவதானித்தவாறே சாரதா படுத்திருந்தாள். அவளின் மனத்தில் ஒருவித நிறைவு குடிகொண்டிருந்தது. மனதுக்குள் சொல்லிக்கொண்டாள்.

'என்னைப்போல் எனது மகள் ஊமையாக வாழமாட்டாள். நியாயத்தைத் தட்டிக் கேட்கும் வலு அவளிடம் நிறைய இருக்கிறது. எனவே அவளது வாழ்க்கை சீராக அமைந்துவிடும்.'

அந்த நினைவு தந்த சுகத்தில் மெய்மறந்து கிடந்தவளை, சிவராமன் தட்டி எழுப்பினான். அவனது கையில் பனடோலும், கோப்பியும் இருந்தது. அவன் பேசினான்.

"சாரதா! அடுப்பை எரிச்சுத் தண்ணி கொதிக்க வைக்கிறதுக்குள்ள எனக்குச் சீ.. எண்டு போட்டுது என்னெண்டுதான் சமைக்கிறநீரோ தெரியேல்ல."

'இப்ப எண்டாலும் உங்களுக்கு என்ரை கஷ்டம் விளங்கிச்சுதே. நான் சும்மா வீட்டிலை இருந்து பொழுது போக்கிறன் எண்டு எந்த நேரமும் குத்திக்காட்டிப் பேசுவியள்'

இப்படி அவள் சொல்லவில்லை. சொல்ல நினைத்தாள், அவள் தான் பேசும் ஊமையாயிற்றே.

**ஊடகங்களினால் எந்த உயர்கருத்து பரிமாறினாலும் மனித மனங்கள் மாறாமல் சமூகமாற்றம் ஏற்படமுடியாது**

# புதிய இல்லம் புதிய வாழ்வு

*'கணவன்மாரை இழந்த பெண்கள் பெற்றோரை இழந்த சிறார்கட்கு ஒளியூட்டும் சமாதான கிராமங்கள்'*

*ருவாண்டாவில் மலைசார் பகுதியில் அமைந்த நிற்ரராம கிராமம், 25000 மக்களுக்கு வாழ்வளித்தது. இன்று 1994 ல் சில இடம் பெற்ற பாரிய இனப்படுகொலைக்குப் பின் வெறும் மக்களற்ற சூன்ய பிரதேசமாகக் காட்சியளிக்கிறது. இக்கிராமம், போரின் கொடூரத்தினால், எல்லாவற்றையுமே இழந்து விட்டது. உடைந்த மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகளே எச்ச சொச்சங்கள். ஓர் கிறிஸ்தவ ஆலயத்தில் மக்கள் தஞ்சம் புகுந்த போது ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதன் எதிரொலி — போரின் பாதிப்புக்களுக்கு—சேவை புரியும் மனப்பாங்குடன் ஆரம்பிக்கப்பட்ட ருவாண்டா பெண்கள் சங்கத்தினரின், செயற்திட்டத்தின் ஓர் செயற்பாடே இச் சமாதான கிராமங்களின் தோற்றம் — கிகாலி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள சமாதானக் கிராமத்தில் கணவன்மாரை இழந்த 400 பெண்கள் குடியமர்த்தப்பட்டு ஒவ்வொருவர் பொறுப்பிலும் நான்கு பெற்றோரற்ற சிறுவர் பராமரிப்புக்கு விடப்பட்டுள்ளனர்.*

*அநாதை இல்லத்தைத் தொடர்ந்து தனித்தனியான இல்லங்களும் ஒவ்வொருவருக்கும் அமைக்கப்பட்டுள்ளது. இச்சமாதான கிராமத்தில் பெண்கள் கௌரவமான முறையில் வாழ்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.*

**— யுனெஸ்கோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் தேடும் பெண்ணிவள்

★ சு. மாதவி

சிந்தனையின் ஆழபரப்பெல்லாம் மூழ்கி அதில் தனையிழந்து யதார்த்தத்திற்கும் தன் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட வாழ்வின் நிதர்சனம் கண்டு, அழுத்தும் வக்கிரங்கங்களால் சிக்குண்டு தவிக்கும் பெண்ணிவள். எண்ணங்கள் என்னவோ சுதந்திரமானவை, காற்றோடு இணைந்து ஊஞ்சலாடும் பூவினம் போன்றது, இரசிக்கத்தக்கது, மகிழ்வின் ஆராதனையில் இராகமானது, நடைமுறை வாழ்வில் சாத்தியமற்றது, இன்னும் சாத்தியமாக்கப்படாதது.

பெண் என்பதை இவள் உணர்ந்திருந்தாள். அந்த உணர்வே இவளுக்குச் சுகமானது. இப்பிறப்பை நினைந்து நினைந்து அகமகிழ்ந்தாள் பெண்ணாக உலாவி வருவதில் பெருமை கொண்டாள். காருண்யம், கருணை, கனிவு கொண்ட தாய்மையுடன் இவளால் இருக்க முடிந்தது. மற்றோர் மனநிலை உணர்ந்து நடந்து கொள்வதும், பிரச்சினைகளில் இருந்து விலத்திக் கொள்வதும், விட்டுக் கொடுத்துப் பழகிக்கொள்வதும், நாவையடக்கி பேசிக் கொள்வதும் இவளுக்கு இயல்பானது, தன்னில், தன் அலங்கரிப்பில், தன் கடமையில் இரசனையுடன் ஈடுபடும் இவளுக்கு சுறுசுறுப்பும், தன்னம்பிக்கையும், முயற்சியுமே பக்கபலம். விதம் விதமான ஆடைக்குவியலிடையேயும் வண்ணச் சேலையும் தலையில் சூடும் ஒற்றைப் பூ விதழுமே பிரியத்திற்குரியன.

வெளியார் பார்வையில் மரபும், பெண்மையின் அடக்கமும், குறுகிய வட்டமும் இங்கு தென்படலாம். இவளை பொறுத்தவரை பண்பாடு எனும் வட்டத்திற்குள் நிற்கிறேன் என்கின்ற கட்டாய உந்துதல் இல்லை. இதனைச் செய்ய இவளால் முடிந்தது. இது இவளது சுபாவம். பண்பாட்டின் ஊற்றாக இந்த அம்சம் அமையலாம் இதுபற்றி இவளுக்கு கவலையில்லை. தன் தனித்துவம் இதனை அடிப்படையாகக் கொண்டதென்பாள்.

எண்ணப்பரப்பில் மனம் அலைகின்றபோது அதனை நிறுத்தி வைத்து ஒழுங்கமைக்கும் வேளை இவள் இவனாக இருந்தால் கூட இத்தகைய குணவியல்பே கொண்டிருப்பேன் எனக் கூறும் மனவுணர்வு திடமானது. தன் பிறப்பில் மகத்துவம் கொள்வதும் உயிரில் நேயம் பாராட்டுவதும் தன் தூய்மையில் அக்கறை செய்வதும் எப்பிறப்பிலும் இவளால் முடிந்தது. தன்னைப் போல பிறரை மதிப்பதும், அவர்களுக்கு சமூக அங்கீகாரம் அளிப்பதுமே இவளது வாழ்வின் இனிய கனவு. இதன் மூலம் கிடைத்திடும் உறவுடனான அன்பே இவளது சுவாசம்.

தொந்தரவு தராத இந்நிஜத்தை சமூகம் நற்கரம் நீட்டி அணைதுக் கொண்டது. இவளே பெண்ணென்றும், குலவிளக்கென்றும் போற்றி எடுத்தது. குடும்பத்திற்கு ஏற்றவள், பொறுமையின் பொக்கிஷம் எனச் சொல்லாலே மகுடம் அமைத்தது. இவ்வளவற்றையும் நடைமுறை நிஜமாக்கி வெற்றிப் பெருமிதத்தில் களிப்புற்றிருந்த இவள் மனதில் குமுறிடும் சோகங்கள் பல, ஆத்திரங்கள் பல. இவை யாவும் இவளுடனே, இவள் மனதுடனே பொங்கி ஆர்ப்பரித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவருக்குமுரிய அடிப்படை உரிமைகள் கூட தன் பெண்ணினத்திற்கு மறுக்கப்பட்டன கண்டு அவலப்பட்டாள். தாங்க முடியாது அல்லலுற்றாள். அனைத்தையும் உடைத்து வெளிவரத் தயக்கம் காட்டினாள். மரபில் இருந்து விடுபடாமலும், புதிய வாழ்வின் பரிணாமம் நோக்கி பயணிக்க முடியாமலும், எதனையுமே முற்று முழுவதுமாக ஏற்றுக் கொள்ள இயலாமலும் தடுமாறித் தத்தளித்தாள். காரணம் பற்றி அலசலின் விளிம்பில் ஏதோவொரு அழுத்தம் தன் மீது பிரயோகிக்கப்பட்டுள்ளதை உணர்ந்தாள். அந்த அழுத்தம் சமூக அழுத்தமென்பது புலனாயிற்று. இதுவே அச்சத்தின் அத்திவாரம் என்பது அறிந்து அதனை புனர் நிர்மாணம் செய்திடக் கனவுகள் கண்டாள். இவள் தேடும் சமூகம் நெஞ்சோடு தவழ்ந்தது அச்சங்கள் தீர்ந்தது புதுயுகம் பொலிவுடன் திகழ்ந்தது.

திவ்வியமான உணர்வு, வாசனை கலந்ததொரு ஏகாந்தம், மனமெங்கும் பிரவாகிப்பதை தான் கட்டியமைத்த மனக்கோயிலில் தினந்தோறும் தரிசித்தாள். ஆண்வர்க்கம் சமன் பெண்வர்க்கம் எனும் கோட்பாடு தலைமையேற்றிருக்க இரண்டினதும் ஆளுமையில் புரிந்துணர்வில் இறுக்கத்தில் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக்கப்பட்டது. அவனில் அவளும் அவளில் அவனும் கொண்ட காதல் அன்பாக பூச்சொரிய ஒருவர் கருத்திற்கும் யோசனைகளுக்கும் மதிப்பளித்தனர். செவிமடுத்து நல்லவற்றை ஏற்றுக் கொண்டனர். உடற் கூற்று அடிப்படையிலான மாறுபட்ட தன்மை காரணமாக அமைந்து இரண்டு வர்க்கங்களது இணைவில் தான் பிரபஞ்சமே இயங்கும் என்கிற நியதியைத் தந்தது இங்கு பெண்ணிற்குரிய தாய்மைப் பேறே அவளுக்கு பலத்தையும் பலவீனத்தையும் கொடுத்தது. அதனைப் புரிந்து கொண்டவன் வாழ்வில் நல்லுறவே நர்த்தனம் செய்தது. அன்பே ஆதிக்கம் பெற்றது. குடும்ப அமைப்பென்பது புனிதமானது. ஒருவனுக்கு ஒருத்தியென்பது உயர்வான மானுட சிந்தனையின் இருப்பிடம் போன்றது. ஐந்தறிவு ஜீவராசிகள் போன்றதொரு வாழ்வமைக்காது இதன் உன்னதம் அறிந்தவர் வாழ்வு பிரகாசித்தது.

இவர்கள் இணைவில் உதித்து விட்ட நட்சத்திரம் வையகமதில் பாதம் பதிக்கையில் பெண் என்பதால் வெறுக்காமலும், ஆண் என்பதால் மதிக்காமலும் குழந்தையெனப்பெற்றோர் கரங்களால் அணைக்கப்பட்டது. பாசவிழிகள் சொரிந்த இனிய பார்வையில் பிஞ்சு மழலை உலகைக் கண்டது.

---

**இருள் கவியும் பொழுதில் வீடு திரும்பும் இவளைப்பார்த்து தந்தையோ சகோதரனோ முறைத்து விரிக்கையில், தனக்குள்ளே சிரித்துக் கொள்வாள்.**

---

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இவை நான்கையும் விடுத்து நேய பாங்குடன் தன்னலமற்றதொரு ஆளுமையுடனான கல்வியறிவு புகட்டி ஒவ்வொரு மழலையும் இச்சமூகத்தில் பவனி வரப் பெற்றோர்கள் வழிவகை செய்வார்களேயானால் இவள் தேடும் சமூகம் இவளுடனே, இவள் அருகே இவளை அங்கத்துவமாக்கி உருப்பெற்றிருக்கும்.

பெண்ணெனப் பார்க்கவேண்டிய சந்தர்ப்பங்களில் அப்பார்வையை விலக்கியவர்கள் தமது இச்சைக்காகப் பெண்ணெனக் கொச்சைப்படுத்தியதையும், காமக்கண்கள் கழுகுப் பார்வையுடன் அலைந்ததையும் சந்திக்கும் போது இவள் மனம் குமட்டிக் கொள்ளும். இதனையெல்லாம் தவிர்த்து நட்புடன் உளமார்ந்த அன்புடன் உறவாடும் இதயங்கள் தேடினாள் இவள் எண்ணங்கள் நிறைவேறி பயணத்தில், வேலைத் தலத்தில் நிறைமாந்தர் உருவாகி வலம் வர சமூகங்கள் தேடினாள், பெண் என்பதாலே பணி புரியும் இடத்தில் அவளை பலரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனே இணைத்து அவர் கொண்டு ஊரைக் கலக்கி அவளது உறவில் சந்தேகக் கதிர்கள் வீசி அவள் மனதை உடைப்பதில் சமூகம் வக்கிர சந்தோஷம் கொண்டது. சும்மா இருந்தவர்க்கு தாமே தாலி, கூறை வாங்கி திருமணம் வார்த்தைகளால் செய்து முடித்து கதையளக்கும் வம்பர்கள் இல்லாதொழித்த குழுமங்கள் நாடி இவள் யாத்திரை நீளும். மானுட நேய மனோபாவம் ஏற்படுத்தித் தந்த உலகில் தவறான பார்வைகள் நினைவுகள் அழிந்து தான் போகுமென்ற நம்பிக்கை இவளுக்கு தந்தது.

இருள் கவியும் பொழுதில் வீடு திரும்பும் இவளைப் பார்த்து தந்தையோ சகோதரனோ முறைத்து விளிக்கையில், தனக்குள்ளே சிரித்துக் கொள்வாள். தங்களது ஆண்வர்க்கத்தால் இவளுக்கு துன்பங்கள், அவக்கேடு ஏற்படும் எனத் தாம் சிந்திப்பது தமக்கு தலைகுனிவைத் தருமெனச் சிந்திப்பார்களா? இதுவே இவள் மனக் கேள்வியாக மேல் எழும்பி அடங்கும். இவர்களது கவலை இவர்களது துயர் தடுப்பது தான்; சந்தேகமில்லை ஆனால் இந்த இன்னல்கள் அழித்தொழியப்படவேண்டுமென ஒவ்வொரு மனங்களும் துணிந்து அழித்தொழிக்குமானால் இம்மண்ணில் இவளால் பெண்ணாக உலா வர முடியும். சுதந்திரக் காற்று மகிழ்வுடன் வீசும்.

**பெண்கள் ஆணிடம் முதிசம் அல்லது நன்கொடை கொண்டுவர நிபந்தனை விதித்தால் எத்தனை ஆணிடம் இதற்கு முகங்கொடுக்கும் தகுதியுண்டு?**

பெண்ணைப் பாரமெனக் கருதுவதன் நோக்கமென்னவென நாள் தோறும் சிந்தித்தாள் சீதனக் காசு இருபது வயதில் கொடுக்க வேண்டுமென்ற ஆதங்கமே அனைத்திற்கும் உச்சம் என்பதை நடைமுறை வாழ்வில் அறிந்து கொண்டாள். பெண்ணிடம் கேட்கும் சீதனத்தை ஆணிடம் முதிசமாக அடிக்கடி மனதிலே கேட்டு வைத்தாள். மனத்துணிச்சல் ஒரு நாள் மேலெழுந்து நேரடியாகப் பெண்கள் ஆணிடம் முதிசம் அல்லது நன்கொடை கொண்டு வர நிபந்தனை விதித்தால் எத்தனை ஆணிடம் இதற்கு முகங்கொடுக்கும் தகுதியுண்டு? பொருளாதார நிர்ப்பந்தம் புனிதமான குடும்ப வாழ்வு சரிவது கண்டு மனம் அழுதது. நியாயமான உரிமைகள் இங்கு சமமாகப் பிரயோகிக்க வேண்டும். இது உன்னத மானுட வாழ்வைத் தந்துநிற்கும்.

சந்தர்பம் சூழ்நிலை காரணமாக ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாத போதும் அன்றி கொடுமைகள் தாங்கிக் கொள்ள முடியாத போதும் பிரிந்து கொண்ட குடும்ப உறவில் அவனை ஏற்றுக் கொண்ட சமூகம் பெண் என்ற காரணத்தால் இவளது மன அழுத்தங்கள் வேதனைகள் புரியாது விலகி நின்று நோக்கும் சமூகத்தின் சிறுமை கண்டு இவள் மனம் சோரும் என்பதில் ஐயமில்லை.

விவாகரத்தில் மட்டுமன்றி விதவை நிலையிற் கூட வாழ்வு மறுக்கப்பட்டு குற்றப்பட்டவள் போல சந்தோஷம் ஒடுக்கப்பட்டு இவளை உலா வர வைக்கும் மானுட மிருகங்கள் நோக்கி அறைந்திடக் கரங்கள் அவாவும். வேதனைகள் சகஜம் அதனது தாக்கங்களை வாங்கிக் கொள்வதில் மனங்கள் வேறுபடலாம் இவளை இவளாக உணர சமூகம் சந்தர்ப்பம் தரட்டும். சுமைகளை இவளிடம் துணிப்பதை இவளால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை இதனது பாதிப்பே இலக்கியமெனக் கொண்டு தங்களது வக்கிர எண்ணங்களை பிரயோகிக்கும் இலக்கிய கர்த்தாகளையே இவளது உள்ளுணர்வு வெளித்தள்ளியது அங்கு பெண்மை தனித்துவம் பெற்றது நெஞ்சோடு அனலாகிக் கனக்கின்ற ஒடுக்கு முறைகள் உடைந்து சிதற இவள் காணும் சுபமான சமூதாயம் வையகத்தில் மிளிர்ந்திட இவள் கனவுகள் நிஜங்களாகி ஊர்கோலம் போகும் அதன்லயிப்பில் வாழ்க்கை அர்த்தங்கள் சொல்லும். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் கொடுமைகளில் அகப்படும் சிறுவர்கள்

★ பி. சுதர்ஷினி

சமுதாயத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சிறுவர்கள் தமது இளமைப் பருவத்தில் கொடூரமான பல இன்னல்களை அனுபவிக்கும் துர்ப்பாக்கியநிலை எமது நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் இடம் பெற்று வருவது வருந்தத்தக்கது. எமது நாட்டில் இன்று இடம் பெற்று வரும் போரின் கொடுமைகளினால் எத்தனை இளம் பாலகர்கள் கொல்லப்பட்டுள்ளனர். நவாலி ஆலயத்தை அண்டிய குண்டுவீச்சுச் சம்பவம், நாகர் கோவில் பாடசாலைச் சிறுவர் பலி, இவர்கள் மட்டுமா! எறிகணை வீச்சிற்கும் குண்டுவீச்சு விமானங்களுக்கும் பயந்து ஒழிந்து கொள்ளும்போதும் ஓடும்போதும் கொல்லப்பட்ட சிறுவர் சிறுமியர் எத்தனையோ.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் 1.5 லட்சம் சிறுவர்கள் ஆயுதமேந்தியபோர்களினால் கொல்லப்பட்டிருக்கின்றனர். இதிலும் நான்கு மடங்கானோர் அங்கவீனராகியுள்ளனர். சுமார் 50 லட்சம் சிறுவர் அகதி முகாம்களில் போர்கள் முடிவுறும் வரை காத்திருக்கின்றனர். மேலும் 1 கோடி 20 லட்சம் பேர் தமது வீடுகளை இழந்துள்ளனர். பல லட்சக்கணக்கானோர் போரின்விளைவுகளினால், மனத்தளவில் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

போரின் விளைவுகளினால் மறைமுகமாகப்பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையோ ஏராளம், பாடசாலைகள், வைத்திய நிலையங்கள் மூடப்பட்டு அல்லது அழிந்து போனமை; உணவு உற்பத்தித் தடைப்பட்டமை, போசாக்குக்குறைவு இன்மை, தடுப்பு மருந்தேற்றுதல் போன்ற அடிப்படைச் சேவைகள் இழக்கப்பட்டமை, காரணமாக இச் சிறுவரின் மேம்பாடு மழுங்கடிக்கப்பட்டுள்ளது. குண்டுகள் எறிகணைகள் வேட்டுக்களுக்குத் தப்பிய லட்சக் கணக்கான சிறுவர் இளம்பிள்ளைவாதம், சின்னமுத்து, வாந்திபேதி போன்ற நோய்களுக்குப் பலியாகின்றனர். பல தொற்று நோய்கள் "அன்ரிபயக்ஸ்" மருந்து வகை இன்மையால், கண், காது தொடர்பான நோய்கள் கவனிப்பாரற்று புறக்கணிக்கப்படுகின்றது. கண்பார்வை இழப்பு, கேள்வி இழப்பு சிறுவர் மத்தியில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

பல நாடுகளில் போரின் பகடைகளாகவும், இலக்குகளாகவும் சிறுவர் நடத்தப்படுகின்றனர். அணிதிரட்டப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டும் யுத்தக்களரியில் ஆயுதமேந்திப் போர் புரியும் படி நிர்ப்பந்திக்குப்படுகின்றனர். தென்கிழக்காசியாவில் சில பகுதிகளில் இரண்டு தசாப்தங்களுக்கு முன் முற்றுப்பெற்ற போராட்டத்தின் போது புதைத்து வைத்து கண்ணி வெடிகட்கு சிறுவர்கள் இன்னும் பலியாகி விடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிள்ளையின் விருத்தியில் போர் ஆழ்ந்தகன்ற தாக்கத்தை ஏற்படுத்துகிறது கருத்துக்கள் சமுதாய உறவுகள், ஒழுக்க நெறிகள், வாழ்க்கையை விளக்கிக்கொள்ளும் மனப்பாங்கு யாவும் பாதிக்கப்படுகின்றது.

1949 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டஜெனிவா சாசனம் ஆயுதமேந்திய பிணக்கு களில் சிறுவர் நிலைபற்றி விரிவாகக் கூறுகின்றது.

15 வயதிற்குட்பட்ட சிறுவர் எவரும் போரில் பங்குகொள்ளலாகாது என்று விதித்துள்ளது. போரிற் சிக்கிய சிறுவர்களின் பாதுகாப்பு பராமரிப்பு யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் கூறுகின்றது. 1993 மே மாதம் 18ம் திகதியில் இவ்வுடன்பாட்டிற்கு 136 நாடுகள் ஒப்புதல் தெரிவித்துள்ளன. ஆயினும் நாடுகளின் செயற்பாடுகள் இதற்கு மாறாகவே உள்ளது. மனித உரிமைகட்கு மதிப்பளிக்காமை, அரசியலில் உறுதிப்பாடின்மை, பேச்சுவார்த்தைகளில் இழுபறி நிலை போன்ற பல்வேறு காரணிகளினால் நிவாரணப்பணிகள் தாமதமடைந்து யுத்த சூழலில் சிக்கிய மக்கள், சிறுவர் பெண்கள் யாவரும் துயரடைகின்றனர். நாட்டின் பிரதான மனித வளமாகிய சிறுவர்கள், போசாக்கின்மையாலும், நோய் நொடிகளினாலும் வளர்ச்சி குன்றி ஆரோக்கியமான மேம்பாடு அடையாவிட்டால் கிடைக்கும் வெற்றி அர்த்தமற்றதாகிவிடும். □

குட்டிக்கதை

# தெரிவு

★ ஏ. எம். மஞ்சுரிக்கா

ராஜா ஒரு சஞ்சிகையின் ஆசிரியர். அவன் அங்கு பிரசுரத்திற்காக வந்த கதைகளை, வாசித்து தரமான கதைகளை ஒரு (File) பைல் இலும் மீள வாசிக்க வேண்டியவற்றை இன்னொரு பைலிலும் வைத்துக் கொண்டிருந்தான்.

அப்போது ஒரு கதை ''மண மகள் தேவை'' எனும் பெயரில் எழுதப்பட்டிருந்தது.

செல்வம் என்பவர் பத்திரிகையில் ஓர் விளம்பரம் போடுகிறார் அதாவது ''மண மகள் தேவை'' எனும் தலைப்பின் கீழ் 30 வயது எவ்வித தீய பழக்கங்களும் அற்ற மணமகனுக்கு 25 வயதுக்குட்பட்ட கடந்தகால வன் செயல்களால் இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட மணமகள்தேவை.

இவ் விளம்பரத்தைப் பார்த்த தந்தை ஒருவர் தன் மகளுக்கு- இம் மணமகனை எப்படியாவது செய்துவிடவேண்டும் என்று முடிவு செய்து உடனடியாக ஆயத்தமும் செய்து திருமணத்தையும் நடாத்தி விடுகிறார்.

அன்று முதலிரவு வேளை செல்வம் அறைக்குள் செல்லும் போது மணமகள் கட்டிலிலிருந்து அழுதபடி இருந்தாள். இதைக் கண்ட செல்வம், அவளுக்கு இராணுவத்தால் ஏற்பட்ட சம்பவத்தை நினைத்துத்தான் அழுகிறாள் எனநினைத்து ''அழவேண்டாம், அதை யெல்லாம் மறந்து விடும்'' என்கிறான். அவள், ''எனக்கு ராணுவத்தால் எவ்வித கேடும் நடக்கவில்லை. அப்பாதான் உங்களிடம் பொய் கூறினார். ஏனென்றால் இப்படி ஒரு விளம்பரம் போட்டவர் நல்ல குண முடையவராக நிச்சயம் இருப்பார் என்று கூறினாள்'' இக்கதையை வாசித்த ராஜா அக்கதையை தரமான பையிலில் வைக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நழுவவிட்ட சந்தர்ப்பங்களை எட்டிப்பிடிக்க

# மீண்டும் ஓர் ஐ. நா. மாநாடு பெண்களுக்காக

★ சரோஜா சிவச்சந்திரன்.

ஐ. நா மிகக் கோலாகலமாக ஏற்பாடு செய்த 4ன்காவது உலக பெண்கள் மாநாடு 95 செப். 4 தொடக்கம் 15செப். 95 வரை சீனத் தலைநகரான பெஜ்ஜிங்கில் இடம் பெற்றது. ஐ. நா. நாடுகளின் மகளிர் தொடர்பான முதலாவது மாநாடு மெச்சிக்கோவில் நடைபெற்ற போது 5000 பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். அடுத்து கொப்பென்கேகனில் உலக மகளிர் மாநாட்டில் பங்குபற்றிய பேராளர் தொகை 10,000 மாக உயர்ந்தது. ஆயினும் 1985 ல் நைரோபியில் நடைபெற்ற 3 வது மாநாட்டில் 15,000 பெண்கள் கலந்து கொண்டதோடு இம் மாநாட்ல் 2000 ஆண்டில் முன்னெடுத்துச் செல்லக் கூடிய பல திட்டங்கள் முன் வைக்கப்பட்டன. இத் திட்டங்களின் செயற்பாட்டில் ஏற்பட்ட பின்னடைவை தளரவிடாது, மேற்கெள்ளப்பட்ட செயற்திட்டங்களை துரிதமாக செயற்படுத்தும் நோக்கில் நான்காவது உலக பெண்கள் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

1975 ம் ஆண்டில் இடம் பெற்ற 1வது உலக பெண்கள் மாநாட்டைத் தொடர்ந்து பெண்ணியக்கக் கருத்துக்களின் எழுச்சி உலகளாவிய ரீதியில் வலுப்பெற்றது. 1985 இல் நைரோபியில் நடைபெற்ற மூன்றாவது மாநாடு முக்கிய பல முன்னோக்குத் திட்டங்களை முன்வைத்த போதிலும், நாடுகளிடையே பல பின்னடைவுகளைச் சந்திக்க நேரிட்டது. இக் குறைபாட்டுக்கான காரணங்களை இனங்கண்டு 21 ம் நூற்றாண்டில் ஆண், பெண் நிதர்சனமாக்கும் வகையில் ஓர் நடைமுறைத் திட்டத்தை தயாரிப்பதே நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டின் நோக்கமாக அமைந்தது சமத்துவம், அபிவிருத்தி, சமாதானம், என்ற கருப்பொருளை மையமாக வைத்து இம்மாநாடு செயற் திட்டங்களை உருவாக்கியது.

1975 ன் பின் 20 வருடங்களின் பின்னர் ஆசிய நாடொன்றில் நடைபெற்ற இம் முக்கியம் வாய்ந்த மாநாட்டில் 30000 பெண்கள் பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்ற பலர் பங்குபற்றினர். இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு சீனத் தலைநகரான பெஜ்ஜிங்கின் தியனமென் சதுக்கத்தில் அமைந்துள்ள மக்கள் மாமண்டபத்தில் ஆரம்பமாகியது. மிக கோலாகலமாக மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் ஆரம்பமாகிய, ஆரம்ப நிகழ்வில் ஐ நா. நாட்டின் சிறப்புப் பிரதிநிதி இஸ்மத் கிற்றானி. சீனப் பிரதமர், மாநாட்டின் செயலாளர் நாகயம் கேற்றூட் மொங்கேலா போன்றோர் உரையாற்றினர். கேற்றூட் மொங்கேலா அவர்கள் கூறியது போல, பெண்கள் பிரச்சனைகள் இன்று யாவற்கும் தெரியும். எமக்கு வேண்டுவதெல்லாம் ஓர் தீர்வே என்றார். மேலும் ஆயுதங்கள் வாங்குதல்போன்ற வீணான முயற்சிகளில் ஈடுபடும் நாடுளின் முயற்சிகளை முறியடுத்து அம் முதலீடுகளை பெண்கள் சுகாதாரம், கல்வி, போன்ற விடயங்களில் முதலீடு செய்ய மகளிர் அமைப்புக்கள் முன் வர வேண்டும் என்று கூறியதுப் இங்கு கவனிக்கத்தக்கது. எமது வார்த்தைகள் குறுகியதாகவும் செயற்பாடு அதிகமானதாகவும் இருக்க வேண்டும் என்று மேலும் அவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 12 நாட்கள் இடம் பெற்ற இம் மாநாட்டில் 185 நாடுகளி லிருந்து பெறப்பட்ட தேசிய அறிக்கைகள், மேலும் ஐ. நாவின் முகவர் நிலையங்கள், கூட்டுக் கமிட்டிகள், அரச சார்பற்ற நிறுவ னங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு ஏற்க னவே தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு அறிக்கை பல திருத்தங்களின் பின் மாநாட் டின் பிரமுகர்கள் முன் மேலும் நடைமுறைப் படுத்தக்கூடிய, மேற்கொள்ளக்கூடிய திருத் தங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இச் செயற்பாட்டு அறிக்கை 149 பக்கங்களையும், 362 பந்திகளையும் கொண்டதாக அமைந்தி ருந்த போதிலும் அறிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அடைப்புக் குறிக்குள் அடக்கப் பட்டிருந்தது. இவையாவும் மேலும் கலந் துரையாடல்களின் போது முழு விளக்கம் பெற்று முழுமையான அறிக்கையாக மாநாட் டின் இறுதியில் வெளியிடப்படும்.

மாநாட்டில் இனம்காணப்பட்ட முக்கிய அம்சங்களாக அதிகாரம் சமமாக பங்கீடு செய்தல், அபிவிருத்தியின் சகல விடயங் களிலும் பெண்களுக்கு முழுமையான ஈடு பாட்டை ஏற்படுத்தல், வறுமை ஒளிப்பு, சமாதானத்தையும் மனித உரிமைகளையும் மதித்தல் போன்ற விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. பாலியல் வன்முறைகள் பெண்கள் எதிர்நோக்கும் ஏனைய வன் முறைகள் பாரதூரமாக எதிர்க்கப்படவேண் டியவையாக இனங்காணப்பட்டது. பெண் ணியக்கருத்தோட்டத்தில் பெண்கள் தனி யாக இனங்காணப்படாது அபிவிருத்தியில் சமத்துவத்தில் ஆண்களின் பங்களிப்பின் முக்கியத்துவமும் உணரப்பட்டது குறிப்பிடத் தக்க மாற்றமாகும்.

இம்மாநாட்டில் ஐ. நாவினால் அங்கீ காரம்பெற்ற 1200 அரசசார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகளும், பார்வையாளர்களாக கலந்து கொண்டனர். மகளிர் அபிவிருத்தி நிலையம் ஐ. நாவின் அங்கீகாரம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனம் என்ற அந்தஸ்த் தில் இம்மாநாட்டில் கலந்து கொண்டது.

## பெண்கள் குருத்துவம்

**கத்தோலிக்க மதத்தில் பெண்கள் குருத் துவம் பெற்று சமய போதகர்களாக்கப்படுதல் தடை செய்யப்பட்ட விடயமாகும். அண்மை யில் இத்தடையை எதிர்த்து பெண்கள் குருத் துவமாநாடு ஒன்று இடம்பெற்றது. இம்மாநாட் டில், வத்திக்கான் ஏற்படுத்திய இம் முடிவை எதிர்த்து தொடர்ந்து போராடப் போவ தாக மாநாட்டின் அமைப்பாளர்கள் குரல் கொடுத்துள்ளதோடு, பல கத்தோலிக்க குருக் களும் பெண்கள் மதகுருவாக்கப்படுவதற்கு ஆதரவு அளிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. விவாதங்கள் தொடர்கின்றன.**

ஐ. நா. மாநாட்டோடு இணைவாக அரச சார்பற்ற நிறுவனங்களின் மாநாடும் பெஜ்ஜிங்கிலிருந்து 53 கிலோமீற்றர் தொலைவிலமைந்துள்ள குவைரோ என்ற நகரில் ஆகஸ்ட் 30ம் திகதி தொடக்கம் செப் டெம்பர் 8ம் திகதி வரை இடம் பெற்றது.

ஆகஸ்ட் 30ம் திகதி தேசிய ஒலிம்பிக் மைதானத்தில் மாநாடு ஆரம்பித்து வைக்கப் பட்ட போது உலகப் பெண்களின் சமாதா னத்திற்கும் ஒற்றுமைக்குமான சின்னமாக 20,000 புறாக்கள் பறக்கவிடப்பட்டது. ஆபிரிக்கப் பெண்களின் சமாதானக்குழுவின் சமாதானச் சுடரை மாநாட்டின் இணைப் பாளர் குயின்ற் சுபத்ரா மாங்டிற்றிடம் கைய ளித்தமை ஒரு வரலாற்று நிகழ்வாகும். மாநாட்டிற்கென அமைக்கப்பட்ட அமைவிடங் களில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங் களின் கருத்தரங்குகள், செயலமர்வுகள், கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் போன் றன இடம் பெற்றன. சமகால உலக நிகழ் வுகள் வெகுஜன தொடர்புச் சாதனங்களின் பெண்கள், போரும் சமாதானமும், மனித உரிமைகள், பாலியல் வன் முறைகள், பொருளாதார திட்டங்கள் போன்ற பல முன் மாதிரியான விடயங்களில் கலந்துரை யாடல்கள் இடம்பெற்றது. இவ்வாறான கலந்துரையாடல்களில் 5000 வரை இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது குறிப்பிடத்தக்கது.

திடலின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த 125 கூடாரங்களில் அல்லது மண்டபங்களில் பல்வேறு துறை சார்ந்த பட்டறைகள், கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

பல்வேறு நாட்டவரும் தங்கள் மொழிகளிலே சுலோகங்களை பவனியாக எடுத்து வந்திருந்தனர். இவர்களது முயற்சி மிக மிக பாராட்டதக்கதாக அமைந்தது.

சீனரின் புகழ்மிகு சுற்றுலா மையங்களை சுற்றிப் பார்க்கும் வகையில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவர் பேராளர்களைக் கவர்ந்த சிறப்பான சுற்றுலாப் பகுதியாக அமைந்தது மேலும் செம்சின்ஒல் கெலின், சம்பர் பலஸ், பலஸ் மியூசியம் கொமியூன்கள், பேகை ஏரி, புத்த கோயில்கள் போன்றவை குறிப்பிடத்தக்க இடங்களாகும்.

இம் மாநாடு—பெண்கள் தம்மைக் கட்டி வைத்திருந்த அடிமைச் சங்கிலியை, தமது வல்லமைகளை ஒன்று திரட்டி கூட்டாக அறுத்தெறிய கொடுக்கப்பட்ட ஓர் வாய்ப்பாகும். இம் மாநாட்டில் தமிழ்ப்பகுதியிலிருந்து திருமதி சரோஜா சிவச்சந்திரன், திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், திருமதி புஷ்பா கணேசலிங்கம், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் கலந்து கொண்டனர். □

## கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் சட்ட எல்லைக்கு ஓர் சவால்

மலேசியாவில் - ''ரீனா கனித'' நிறுவன பணிப்பாளர் திருமதி ஐரீன் பெர்ணாண்டஸ் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்து, அவர்கள் நிலைமைகள் தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கை, வேண்டுமென்று தயாரிக்கப்பட்ட பொய் பிரசாரம் என்று கூறப்பட்டு அவர் மார்ச் 18, 1996ல், பிரிவு 8ஏ (I) அச்சடித்தல், பிரசுரம் வெளியிடல், சட்டம் 1984 ல் கீழ் தவறான வெளியீடு என்ற குற்றத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் குற்றவாளியாக காணப்படுமிடத்து 3 வருட சிறைத்தண்டனை அல்லது மலேசியா ரிங்கிற ஆர். எம் 20,000 (US 8, 052) தண்டமாக செலுத்த வேண்டி இருக்கும்.

அவரது அறிக்கை எந்த விதத்திலும் தவறான தகவல்களை தெரிவிப்பதாக இல்லை இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் குறிப்பாக பெண்கள் நடத்தப்படும் கேவலமான முறைகள் இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவரது கருத்துகட்கு ஆதரவு தெரிவித்து பல மனித உரிமை இயக்கங்கள் குரல் எழுப்பியுள்ளதோடு, கருத்து வெளியிடும் சுதந்திரம் தடை செய்தல் அடிப்படை மனித உரிமை மீறல் என போர்க் கொடி உயர்த்தியுள்ளனர். வழக்கு விசாரணை தொடர்கின்றன.

ஆசிய பெண் தொழிலாளர் நியூஸ் லெற்றர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமரீதியாகப் பெண்களின் வாழ்க்கை நிலைப்பாடுகளைப் பார்க்குமிடத்து மிகப் பெரியளவில் அவர்கள் அடிமைப்பட்டுவாழு கின்ற சாதாரண நிலைகள் இருக்கின்றனர். இது நூற்றுக்கு நூறு வீதம் என்றே சொல் லலாம். சிறிய அளவிலேனும் சமூக வாழ்க் கையில் அனுகூலங்களை கிராம மட்டத்தில் வாழும் பெண்கள் அனுபவிக்கவில்லை என்றே கூறவேண்டும். தவிர்க்கமுடியாமல் அவள் அனுபவிக்கின்ற சந்தோசங்கள் கூட அவளின் மீது அவளின் கணவன் நடத்து கின்ற திணிப்பாகவே இருக்கின்றது.

அவளுக்கு ஏற்படும் சுயத்திலான உணர்வு களில், மகிழ்வு நிகழ்வுகளைப் பூரணமாக அனுபவிக்கும் உரிமை சிறிதுமே அளிக்கப் படவில்லை. பிறந்த வீட்டில் தாய் தந்தை யருடன் ஆனாலும் சரி, புகுந்த வீட்டில் மாமன் மாமி ஆனாலும் சரி அவளை அதட்டி ஒதுக்கும் நிலை பரவலாக உள் ளது.

ளையின் மீது திணித்து வருகின்றார்கள், கால்நடைகளை அவிட்டுக் கட்டுதல் வேண் டும். அவற்றிற்குத் தீனி போடுதல் வேண் டும். தண்ணீர் வைக்க வேண்டும். வீட்டுத் தேவைக்கு தண்ணீர் எடுக்க வேண்டும். அண்ணன், தம்பி, தாய், தந்தை எல்லோ ரினதும் உடுப்பைக் கழுவவேண்டும் வீட் டைப் பராமரிக்க வேண்டும். கைக்குழந் தைகளைப் பராமரிக்க வேண்டும் இவ்வகை யான வேலைகள் அனைத்தும் ஆண் பிள் ளைகளுக்குக் கொடுப்பதில்லை. பெண்பிள் ளைகளுக்கே பெற்றோர் கொடுக்கின்றார் கள்.

மேலும் விளக்குக் கொழுத்துவது, சமை யலுக்கு உதவி செய்வது இந்தப் பணிகள் படிக்கும் காலத்திலே பெற்றோர்களால் செய்விக்கப்படுகிறது. இதன் காரணத் தினால் பெண்பிள்ளைகள் ஆணுக்குப் பணி விடை செய்யவேண்டியது பெண்ணுக்குத் தார்மீகப்பொறுப்பு என்ற உணர்வு ஏற் பட்டுவிடுகிறது. திருமணங்களைச் செய்து

# அர்த்தத்தை இழந்தவர்கள்......

★ வளநாடான்

பிறந்த வீட்டிலும் கூட அவளின் மன விருப்பப்படி எதையும் பெற அனுமதிப்ப தில்லை. படிப்புக் கூட தாய் தந்தையர் அவளின் உறவினர்கள் விரும்புகின்ற அளவி லேதான், அதற்கு மேல் அவள் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும்தொடர்ந்து படிக்க அனுமதியில்லை.

## பாகுபாடு காட்டும் நிலையால் பாதிக்கப்படும் பெண்மை

குடும்பத்தின் சுமை அழுத்தங்கள் சின்ன வயதிலிருந்தே பெற்றோர்கள் பெண்பிள்

வாழுகின்ற பெண்களைக் கணக்கெடுத்துப் பார்க்கின்றபொழுது அவர்கள் ஆணாதிக் கத்தின் பிடியில் சிக்குப்பட்டு வாழும் நிலைப்பாட்டை உணரலாம்.

ஆணாதிக்கத்தின் பிடியில் அகப்பட்டு அதற்கமைவாக இயைந்து போதும் தன் மையை சின்ன வயதிலே பெற்றோரின் வளர்பு விதங்களினால் நியாயம் எனக் கருதப்பட்டுள்ளது, சற்றுப் பொருளாதார ரீதியில் முன்னேறிய குடும்பங்களைத் தவுர்ந்த ஏனைய குடும்பங்களின் பெண்கள் கூலி உழைப்புக்கு போகின்றவர்களாவே இருக்கின்றார்கள். உழைக்கும் இடத்தில் ஆண்களை விட குறைவான வேதனமே பெறுகின்றார்கள், ஆக கணவனை மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமே உழைத்து இன்றைக்குக் குடும்பத்திலாகும் செலவுகளை ஈடுசெய்ய வேண்டியுள்ளது. மனைவியைவிட அதிகமாக வேதனம் பெறும் கணவன் தனது வேதனத்தில் மூன்றில் ஒரு பங்கை அல்லது அரைப் பங்கை தனது தேவைக்காகச் செலவு செய்துவிடுவதனால் குடும்பத்தின் மொத்தச் செலவுக்குப் பெண்ணே தனது வேதனம் முழுவதையும் கொடுப்பதனூடாக அதிகமாகச் செலவு செய்கிறாள். கிராமப் புறத்துப் பெண்கள் வெற்றிலை பாவிப்பார்கள், சுருட்டுப் புகைப்பார்கள், சிலர் மது அருந்துவார்கள். அவர்கள் உழைத்து அவர்கள் கையிலேயும் பணம் புழங்குவதன் காரணமாகவும் மது அருந்தும் பெண்கள் தனது கணவனுக்கும் தனது பிள்ளைகளுக்கும் தெரியாமல், சில இடங்களில் தெரிந்தும் மது பாவனையில் ஈடுபடுகின்றார்கள். மது பாவனையில் ஈடுபடுவதன் ஊடாக மதுவைப் பாவிக்கும் பெண் தன் கணவனாலும், உறவினராலும், வாழும் கிராமத்தினராலும் பழிக்கப்படுகின்றவளாக, திட்டப்படுகின்றவளாக உருவாகிவிடுகின்றாள். அவளின் மேல் அவளது கணவன் மேற்கொள்ளுகின்ற தடியடி, மண்டையுடைப்புக்களைக்கூட அவருக்கு வேண்டியதுதான் என்று நியாயப்படுத்தி விடுகின்றனர். குடிக்கும் ஆணுக்குக் கொடுக்காத கெட்ட பெயரை குடிக்கும் பெண்ணுக்கு அவர்களின் உறவினர்களே சூட்டிவிடுகின்றார்கள். இந்த நிலையில் குடும்பத்தின் பண்பாட்டைக் காப்பாற்றவேண்டியவள் பெண்தான். பெண் அடங்கியிருக்க வேண்டும் என்கின்ற கோட்பாடுகளினாலே உருவானதெனலாம்.

## கிராமத்தில் பெண்கள்

கிராமத்தில் ஆண்கள் எந்தளவுக்குக் கடுமையான வேலை செய்கின்றார்களோ, அதே அளவுக்குப் பெண்களும் கடுமையாக வேலை செய்கின்றார்கள். தோட்டங்களில் வேலை செய்கின்றார்கள். வசதி படைத்தவர்களின் வீடுகளில் நெல்லிடித்து அரிசியிடித்து, அரிசியாலைகளில் வேலை செய்கின்றார்கள். மைல் கணக்குக்கு அப்பாலும் கடற்கரைக்குச் சென்று பெட்டிகளில் மீன் எடுத்து தலையில் சுமந்து ஆறு, ஏழு மைல்களுக்கு அப்பால் இருக்கும் சந்தைக்குச் சென்று சத்தம் போட்டு கூறி விலை பேசி விற்றல் இப்படிப்பட்ட பல்வேறு கடின வேலைகளைச் செய்கின்றார்கள். உழைத்து வீடு திரும்பினால், கணவன் தனக்குத் தேவையான அளவு பணம் எடுத்துக் கொண்டு குடிக்கப் போய்விடுவான். அவள் வீட்டில் இருக்கும் வேலைகளை எந்தவிதமான மனச்சலிப்பும் இன்றி முன்னர் வேலை செய்த உடல் அலுப்புக்களைத் தாங்கிக்கொண்டு செய்து முடிக்கின்றாள். சிலவேலைகளில் சமையல் ருசி கணவனின் வாய்க்கு இதமாக அமையவில்லை என்றால் கணவனின் விருப்பப்படி திரும்பவும் சமைக்கவேண்டும். இல்லை என்றால் அடியும் உதையும் வேண்ட வேண்டிவரும்.

இவர்களை விட இன்னொரு வகையிலும் பெண்களின் வாழ்வு நிலையைப் பார்க்கலாம்.

கணவனின் நிர்ப்பந்தத்திற்கு ஊடாக உழைக்கச் சென்று உழைத்து வந்த பணத்தைக் கூடுதலாக கணவனின் செலவுக்கே கொடுக்கவேண்டும். அந்தக் கணவர் எந்த வேலைக்கும் போகாதவராக இருப்பார். மனைவி உழைத்து வரும் உழைப்பில் அவருக்குக் கொடுத்தாக வேண்டும். இல்லை என்றால் அடியும் உதையும் தான்.

குடும்பத்தில் கணவன் உழைப்பின்றி இருந்தாலும் மனைவி உழைப்புக்குப் போகின்றாள். உழைத்து வந்த பணத்தை குடும்பத் தேவைக்கே செலவு செய்கின்றாள். கணவன் தனது செலவுக்கு ஏதாவது தா என்று கேட்காவிட்டாலும் தனது உழைப்புப் பணத்தில் ஒருபகுதியைக் கொடுக்கின்றாள்.

உழைப்பு இருந்ததோ இல்லையோ மனைவி கணவனின் செலவுக்குப் பணம் கொடுத்தாக வேண்டும். குடும்பத்தின் செலவை பட்டினிகிடந்து தவிர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாலும் கணவனின் செலவுக்கான கொடுப்பனவை எப்படியும் கொடுத்தே ஆகவேண்டும். இதனால் உழைக்கவேண்டிய அவசியம் அவள்மேல் இறுக்கமாகப் பூட்டப் பட்டுள்ளது. குடும்பத்தின் பொருளாதார சுமையைச் சுமக்கமுடியாமல் கிராமத்தில் சில பெண்களுக்கு ஒழுக்கத்தவறு ஏற்பட ஏதுவாக உள்ளது என்பதை நினைவு கொள்ளவேண்டும்.

## தாரம் மாறும் தாம்பத்தியம்

கணவன் இன்னொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்துவார் அந்தப் பெண்ணை யும் அவரது இரண்டாவது மனைவியாக ஏற்று இந்த முதல் மனைவி அனுசரித்துப் போகவேண்டும். கணவன் இரண்டாவது மனைவியுடன் இருக்கும்போது ஏற்படும் வாழ்க்கைச் செலவுக்குத் தட்டுப்பாடு ஏற் பட்டால் முதல்மனைவி பணம் கொடுக் கிறாள். வாழ்க்கையின் தொடர்ச்சி நகர் வில் தன்னுடைய உழைப்பில் இருந்து மட்டுமல்ல தனது பிள்ளையின் உழைப்பில் இருந்தும்கூட அந்தக் கணவனிக் இரண் டாவது மனைவியுடனான குடும்ப வாழ்க் கைச் செலவுக்கு பணம் கொடுப்பதாக முதல் மனைவிமார் இருப்பதையும் கிராமத் தில் பார்க்கலாம்.

சிலவேளையில் மூன்றாந் தாரத்தையும் தேடுவார். அப்போதும்கூட கணவனின் ஒழுக்க நடவடிக்கைக்கு குரல் கொடுப் பதில்லை. இது தங்கள் விதி என்று எண் ணிக்கொண்டு பேசாதிருக்கும் நிலையும் உண்டு.

## குடியைக்கெடுக்கும் குடி

குடும்பத்தில் ஆணும், பெண்ணும்உழைப் பார்கள். மனைவியின் உழைப்பு கணவனி டமே கொடுக்கப்படவேண்டும். அந்தப் பணத்தில் தனது சொந்தச் செலவுக்குச் செலவு செய்துவிட்டு மிகுதியே மனைவி யிடம் கொடுப்பார். அந்த மிகுதி அவளின் வேதனத்தை விடக் குறைவாகவே இருக் கும் கணவன் தனது உழைப்புக்கு மேலா கச் செலவு செய்கின்றான். உழைக்கும் தனது மனைவி தன்னுடைய உழைப்புக்கு மேலாக ஏற்படுகின்ற தனது சொந்தச் செலவுக்குப் பணம் தந்தே ஆகவேண்டும். என்கின்ற கண்டிப்பின் காரணமாகவே இந்த நிலை. இவற்றைவிட உழைத்தவர் கள் மது அருந்தி ஆகவேண்டும். மது அருந்தினால்தான் உழைத்த அலுப்புத்தீரும் என்ற பிழையான புரிந்துணர்தலின் கார ணமாக சிறியதாய் மது அருந்த வெளிக் கிட்ட பெண்கள் பெரியளவில் மது அருந் துவது கிராமத்தில் உண்டு.

பெண்கள் உழைப்புக்குப் போவதில்லை. ஆனால் மது அருந்துவார்கள். அந்தப் பெண்ணின் கணவனே மதுவை வாங்கிக் கொடுப்பார். அப்படிக் கொடுக்கவில்லை என்றால், அந்தப் பெண் குடும்பத்தில் சகவாழ்வுக்கு ஒத்துழைக்கமாட்டாள். இந் தப் பெண் மது அருந்தப் பழகியது கண வனின் விருப்பத்திலேயே. மனைவியை மது அருந்த வைப்பதன் ஊடாக கணவன் தனது மகிழ்ச்சியைப் பெருக்கிக்கொண் டான். இதன் காரணமாக மது அருந்து பவளானாள். இப்படிப் பார்க்கும்போது நூற்றுக்கு தொண்ணூற்றெட்டு வீதம் ஆணாதிக்கப்பிடியில் சிக்குண்டு வாழ்கின் றார்கள் ஒன்றரைவீதமானவர்கள்கொஞ்சம் விடுபட்டு வாழ்வதையும், அரை வீதமா னோர்கள் மீறல் வாழ்க்கையை வேற் கொள்பவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இந்தச் சீரழிவுக்குள் சிக்குண்டு கிடைக் கும் கிராமப் பெண்களை விடுவிக்க வேண் டிய பொறுப்பு, இன்றைய சமூகநலன் பேணுவோருக்கு அவசியப்பாடாகும். எடுத்த எடுப்பிலே இந்தக் குறைப்பாட்டி லிருந்து பெண்களை விடுவித்து விடமுடி யாது. இளம்சந்ததியினருக்கு ஏற்படுத்தும் புதிய கோணத் தரிசனங்கள், அறிவுரை கள், ஆலோசனைகள், பண்படுத்தல்கள் ஆகியவைற்றை கிராமத்தின் ஆண் பெண் இருபாலாருக்குமே ஊட்டுவதன் மூலம் நீண்டகால அடிப்படையில் இந்த ஆணா திக்கக் கூறுகளை, பெண்ணடிமைத் தனங் களை இல்லாது செய்யலாம் என நம்ப லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் அபிவிருத்தி நிலையம்
## நடைமுறைப்படுத்தும் செயற்திட்டங்கள்

★ கருத்தரங்குகள், பயிலரங்குகள், ஆய்வரங்குகள் என்பவற்றை நடத்துதல்.

★ குழந்தைகள், பிரசவத் தாய்மார்கட்கு போஷாக்கு வழங்குதல், தாய் சேய் நலத்திட்டச் செயற்பாடு.

★ வசதி குறைந்த மாணவர்களுக்கான கல்வித் திட்டம்.

★ வறுமையில் வாடும் பெண்கட்கு சிறு வருமானமளிக்கக்கூடிய பொருளாதார திட்டங்களைச் செயற்படுத்துதல்.

★ பெண்கள் உரிமைகளுக்காகவும், அவர்கட்கு எதிராக காட்டப்படும் வன்முறைகட்காகவும் குரல கொடுப்பதோடு மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தலும், முறைப்பாடுகளை மேற்கொள் ளலும்.

★ நாடளாவிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் பெண்கள் அமைப்புகளுடன் தொடர்பைப் பேணுதல்.

★ பாலர் பாடசாலைகளை நடத்துவதற்கு உதவுதல்.

★ சிறு பொருளாதார திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பெண்களுக்கு மீளளிக்கப்படும் கடன் வழங்குதலும், சேமிப்பை ஊக்குவித்தலும்.

★ பெண்களுக்கு தொழிநுட்ப பயிற்சிகள் அளித்து சான்றிதழ் வழங்கல்

★ நூலக சேவை.

★ நங்கை சஞ்சிகை வெளியிடல்.

---

## மகளிர் அபிவிருத்தி நிலைய நூலகத்தில்...

இங்கு 'பெண்ணியம்'' தொடர்பாக பல நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. எமது நூலகத்தில் இவ்வகையான 700 க்கும் மேற்பட்ட நூல்கள் உள. இவை தவிர பல நாடுகளிலிருந்து பெண்கள் தொடர்பாக வெளியிடப்படும் சஞ்சிகைகள், சுகாதார ஆய்வு நூல்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான நூல்கள். போன்றவைகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. பெண்ணியம் பாற்பாகுபாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்பவர்கள் எமது நூல் நிலையத்தைப் பயன்படுத்தி பயனடையலாம். நூலகத்தில் சகல அங்கத்தவர்களும் நூல்கள் சஞ்சிகைகளைப் பெற்று வாசிக்க உரித்துடையராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From

DCS

DATA CONNECTION SYSTEMS (PVT) LTD.

☆ Computer Sales
☆ Computer Training
☆ Software Developments

(CENTRE FOR ADVANCED COMPUTING & INFORMATION SYSTEMS)

REG. OFFICE : 32, 32ND , LANE, COLOMBO - 6.
BRANCH : NO. 12, OLD REST HOUSE ROAD, BATTICALO.
FAX : 0094 - 1 - 583915

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org